www.tamilarangam.net



# சுவடுகள்

SUVADUKAL

A Tamil Monthly from Norway

**RAYA**
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாணமாம்

**ஜீவிதன்**

தைலாவைத் திறந்துவைத்தால்
தங்கமணம் வீசுகின்ற
தரமான யாழ்ப்பாணமாம்
யாழ்ப்பாணம்.
மாலைதரிக்க
மட்டான பெண்ணுமுண்டோ,
கூறை தரிக்க
குலத்திலொரு பெண்ணுமுண்டோ
பூராயக் கதைபேசும்
பேராசைச் சமூகமிது.
பேயாண்டால் நமக்கென்ன?

முத்தம் கழியாமல்
முன்னாலே வைச்சிருந்து
சீமைத் துரைகளுக்கு
சீரோடு கொடுக்கின்ற
ஊமை ஜனங்களெல்லே.

குந்துகூர் எதுவுமின்றி
குடிமுழுகிப் போனாலும்
வீட்டுக்கொரு பிள்ளை
வெளிநாட்டில்.

கோட்டுச் சூட்டோடும்
கொளுகொளுத்த சொக்கோடும்
பாட்டுப்பெட்டி, பவுடர், சென்ரெண்டு
நோட்டுக் கட்டோடு வருவர்
நமக்கென்ன?
பேயாண்டால் நமக்கென்ன?
●

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சுதந்திரம் என்பது பெயரளவில் மாத்திரமே நடைமுறையில் உள்ளது. அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள பல தரப்பினரும் மனித உரிமைகளை மீறிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவோரால் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர்.

இந்த மனித உரிமை மீறல்களில், இலங்கை அரசு, இந்திய அரசு (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது), ஜேவிபியினர், விடுதலைப் புலிகள், முஸ்லிம் ஊர்காவற் படையினர், ஈபிஆர்எல்எஃப், மற்றும் கொழும்பு இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன, ஈடுபட்டும் வருகின்றன. மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை புரியப்படும் கொடுமை இன்னும் தொடர்கிறது. இது தொடர்கதையாகவே உள்ளது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். இதில் எவரும் எக்காரணத்தைக் காட்டியும் பின்னிற்கக்கூடாது, முடியாது.

சகல அரசியற் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகல தரப்பு மனித உரிமை மீறல்களும் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது●

**தூண்டில்,**

Sudasien Buro
Grosscheim Str 58,
4600 Dortmund 1
GERMANY

**சஞ்சீவி**

Danmarks gade 10
7500 Holsterbro
DENMARK

www.tamilarangam.net

சிறந்த வெளிநாட்டுப் படம் என்று இந்தப் படத்திற்கு விருது வழங்கப்படக் காரணம், அந்தப் படத்தில் உள்ள படைப்பாற்றலா அல்லது கொம்யூனிஸ எதிர்ப்பா என்பது எனக்குப் புரியவில்லை.

இவ்வாறான தொகுதிகளில் தரத்தை மிகக் கறாராக எதிர்பார்ப்பது அவசியமற்றது. ஏனெனில் இத்தொகுதி வெறுமனே இலக்கியத்திற்குத் தொண்டு செய்வதை நோக்கமாய்க் கொண்டிராமல், பெண்களுக்கு ஒரு போர்வாளைத் தயார் செய்வதையே இலக்காய்க் கொண்டிருப்பதுடன், பெண்களது போர்க்குரலைப் பதிவு செய்வதாயும் உள்ளது.

லோகு இறந்துவிட்டான். நானவனை இழந்துவிட்டேன். என் கண்ணிரால் அவனைப் போர்த்தி மண்ணுட் புதைத்துவிட்டேன். நான் தனியன் என்ற உணர்வு என்னுள். என் வீட்டு முற்றத்து மாதுளை இப்போ நிறையவே காய்த்துக் கிடக்கிறது. ஆனால் லோகுதான் இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள ஈழ அகதிகள் இப்பொழுது இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளனர். ஈழத்தின் ரத்தவாடை வீசும் தாயகத்திற்குச் செல்வதா? நாள்தோறும் தமிழ்நாடு காவல்துறையாளாலும், ரவுடிகளாலும் அவமானப்படுத்தப் பட்டபோதும், சுயமரியாதையை இழந்து அல்லது சகித்துக்கொண்டு இங்கேயே வாழ்வதா? முடிவெடுப்பது அவ்வளவு சுலபமாக இல்லை.


## இந்த இதழில்

அதியமான்
அரவிந்தன்.கி.பி.
அமிழ்தன்
அயலான்
அப்ளாச்சாரி
அஸ்ராவி, ஹனன்
ஆதவன்.க
இளைய அப்துல்லா
சாகுந்தலன்
துருவச்சி
ஜீவிதன்
ஜெயக்கொடி.எஸ்

தவிர்க்கமுடியாத
காரணங்களால்
ஏற்பட்ட
காலதாமதத்திற்கு
மனம்வருந்துகிறோம்.

சுவடுகள்

www.tamilarangam.net




இலங்கையில் தமிழர்கள்மீது அரசு திட்டமிட்ட முறையில் நடத்திவரும் இனஅழிப்பில் ஒரு பகுதியாக, வெளிநாட்டில் இருந்து தமது உறவினர்களுக்கு வடபகுதியைச் சேர்ந்தவர்கள் அனுப்பிவைக்கும் தபால்கள் பிரிக்கப்பட்டும், காரணம் இன்றித் தாமதமாயும் போகின்றன. இதை நிறுத்த என்ன செய்யலாம்? கொழும்பில் அரசோ, இதற்குச் சில தனிப்பட்ட நபர்கள் மட்டுமே காரணம் என்றோ, பாதுகாப்புக் காரணம் என்றோ ஒரு பெரிய சுத்துமாத்தை விட்டுக் கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் உள்ள உண்மை என்ன? இவ்வாறு செய்ய அரசுக்கு உரிமை உள்ளதா?

இவ்வாறு தபால் தொடர்பான பல விடைகாண முடியாத கேள்விகளுக்கு விடைகாண நோர்வேத் தபாற் திணைக்களத்தை விசாரித்தபோது, அதற்குப் பொறுப்பான உயரதிகாரி ஒருவரைச் சந்தித்தாலேயே இவற்றிற்கு விடைகள் கிடைக்கும் எனத் தோன்றியது. பல சிரமங்களுக்கு மத்தியில் தனது நேரத்தை எம்முடன் ஒதுக்கி இவ்வாறான சந்தேகங்களைத் தீர்க்க உதவியவர், தூர்கில் நேஷே (Torikil Nesje) என்ற அதிகாரி. வெளிநாட்டுத் தபால்களுக்குரிய செயலகத்தின் இயக்குனரான இவர் எளிமையாகவும், நிதானமாகவும் பேசுபவர்.

"இவ்வாறு தனிப்பட்டவர்களின் கடிதங்களை உடைப்பதற்கோ, தாமதப் படுத்துவதற்கோ இலங்கை அரசுக்கு அதிகாரம் உள்ளதா?"

# வடக்கே செல்லும்வழியில் கிழிக்கப்படும் வெளிநாட்டுத் தபால்கள்

## நோர்வேத் தபாற்திணைக்களம் என்ன சொல்கிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"இல்லை, பொதுவாக எந்த நாட்டு அரசுகளுக்கும் இந்த அதிகாரங்கள் கிடையாது. ஏனெனில் மிகப் பெரும்பாலான உலக நாடுகள் (170), ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் சர்வதேச தபால் நிறுவனத்தில் (**Universal Postal Union**) அங்கம் வகிக்கின்றன. (தென்னாபிரிக்கா நிறவெறிக் கொள்கை காரணமாக இதில் சேர்க்கப்படவில்லை) அதில் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையே அடிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில விடயங்களைக் கைக்கொள்வது அவசியம். அவற்றில் கடிதங்களைத் திறக்கக் கூடாது என்பதும் ஒன்று."

"இலங்கையில் அவ்வாறு திறக்கப்படுகின்றன என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் யார் அதற்கெதிராக நடவடிக்கை எடுப்பது?"

"நேரடியாக இவ்வாறான விடயங்களில், உதாரணமாக இலங்கை அரசுமீது, நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை இப்போது இல்லை. இது பெரும்பாலும் அரசியல் சார்ந்த கேள்வி. சர்வதேச தபால் நிறுவனம் இவ்வாறன நிலைகளில் நேரடி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எதையும் கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை. ஆனால் சிறப்பான சூழலில், உதாரணமாக பொருளாதாரத் தடை விதிக்கப்படும் ஒரு நாட்டுக்கான தபால் வினியோகம் தொடர்பாக இவ்வமைப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம்."

"ஒரு சாதாரண கடிதத்திற்கு நாம் அனுப்பும் இடத்தில் இருந்தே (உதாரணம்: நோர்வே) முத்திரைக் கட்டணம் செலுத்துகிறோம். ஆகவே தபால்க் கட்டணம் பெறும் நாட்டுக்கு, அந்தத் தபால் சரியாகப் போய்ச் சேர்வதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் கிடையாதா?"

"நான் முன்பு கூறியதுபோல சர்வதேச தபால் நிறுவன விதிகளுக்கமையக், கடிதம் குறித்த நாட்டைச் சென்றடையும்வரை அனுப்பிய நாடு பொறுப்பேற்கலாம். ஆனால் உள்ளூரில் தபால்கள் கையாளப் படுவதை சர்வதேசச் சட்டம் கடுமையாகக் கட்டுப் படுத்தவில்லை. அது, அந்த நாட்டின் கடிதக் கையாளல் தொடர்பான சட்டத்திலேயே பெரிதும் தங்கியுள்ளது. குறிப்பாக சாதாரண (பதிவு, காப்புறுதி செய்யப்படாத) தபால்கள் இவ்வாறு பிழையான வழியில் கையாளப்படுகையில் சர்வதேசச் சட்டம் எதுவும் செய்யமுடியாது."

"உதாரணமாக நோர்வேயில் கடிதத்தை அனுப்பியவர் என்றமுறையில் நான் உங்களிடம் கடிதம் போய்ச் சேராததுபற்றி முறையீடு செய்தால், அதுபற்றி நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்? அல்லது எடுக்கமுடியும்?"

"துரதிர்ஷ்டவசமாக இதற்கு நேரடி நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றது. ஏனெனில் தனிப்பட்ட கடிதங்களுக்குப் பதிவுகள் கிடையாது. அவை எங்கு தொலைந்தன என்று கண்டுபிடித்தல் இலகுவல்ல.

உலக ரீதியில் நாடுகள் தபால் நடைமுறைகளைப பொதுப்படுத்துவதற்காகச் சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. இவற்றைப் பின்பற்றுவதையும், புதிய சட்டங்கள் உருவாக்கப் படுவதையும் சர்வதேச தபால் நிறுவனம் கட்டுப்படுத்துகிறது. பேர்ணில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு ஐ.நா.சபைக்குக் கீழ் இயங்கும் உலக உணவு நிறுவனம், உலகத் தொழில் நிறுவனம் என்பன போன்றது. பிராந்திய ரீதியில் நாடுகள் இவ்வமைப்பு போன்று தபால் தொடர்பான நடவடிக்கைகளின் தமக்கிடையேயான ஒற்றுமைக்காகப் பிராந்திய அமைப்புகளை உருவாக்கியிருக்கின்றன.

சர்வதேசத் தபால் நிறுவனத்தின் முகவரி: **Bureau International, de l'Union postale universelle, Case postale, 3000 Bern 15, SWITZERLZND**


அதேசமயம், பதிவு செய்யப்பட்ட கடிதமெனில் அது எங்கு போய்த் தொலைந்தது என்பதை நாம் அந்த நாட்டுத் தபாற்துறையிடம் விசாரிக்கலாம். ஆனால் அதற்குரிய பதில் மிகத் தாமதமாகவே வந்துசேரும் என்பதே உண்மை. கடந்த பன்னிரு மாதங்களில், நோர்வேயில் இருந்து அனுப்பப்பட்ட மொத்தம் பன்னிரு பதிவுத் தபால்கள் தவறிப் போய்விட்டன. இவற்றில் ஒன்று மாத்திரமே இலங்கைக்கு அனுப்பப் பட்டது, அதுபற்றிய விளக்கத்தை இன்னும் இலங்கைத் தபாற்துறை எமக்கு அறிவிக்கவில்லை. அவர்கள் அறிவிக்கும்வரை நாம் பொறுத்திருத்தல் வேண்டும். வேறு நடவடிக்கைகள் எடுக்க முடியாது. ஆனால் அந்தக் கடிதம் பற்றிய சரியான விளக்கம் கிடையாதவிடத்து, அதை அனுப்பியவருக்குரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும். ஆனால் சாதாரண தபால்கள் தொலைந்தால் அதற்கு ஒருபோதும் நட்டஈடு வழங்கப் படுவதில்லை"

தற்போது வடக்கிலங்கையில் உள்ள நிலைமைகளால், சிலர் பணமாகத் தபாலுக்குள் வைத்து அனுப்புகின்றனர். இது தவிர்க்க முடியாதது. அதேவேளை, இவ்வாறு அனுப்புவது சட்டப்படி குற்றம் ஆகுமா? நேஷே என்ன சொல்கிறார்?

"சர்வதேச ரீதியாக, தபாலுக்குள் பணம் அனுப்புவது குற்றம்தான். ஆனால் இதைத் தபாற்திணைக்களம் பாரதூரமான குற்றமாகக் கருதுவதில்லை. அதேவேளை, தபாலுக்குள் பணம் அனுப்பவேண்டிய தவிர்க்க முடியாத நிலைமைகளில், அந்தத் தபாலைக் காப்புறுதி செய்து அனுப்புவதே பாதுகாப்பானது. காப்புறுதி செய்ய அதிகத் தொகை செலவாகாது."

"சில வேளைகளில் சில நாடுகளில் தனிப்பட்டவர்களின் தபாலை அரசு, சில காரணங்களுக்காகத் திறக்கலாம் என்று ஒரு சட்டம் நடைமுறையில் இருக்கிறதா?"

"இவ்வாறான நடைமுறைகளை (முன்னாள்) கிழக்கைரோப்பிய நாடுகளில் நாம் கண்டிருக்கிறோம். அதிகளவில் கடிதங்கள்




*அண்மையில் டென்மார்க்கில் நிகழ்ந்த சர்வசன வாக்கெடுப்பில், ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதற்கு டென்மார்க்கின் பெரும்பான்மை வாக்காளர்கள் இணக்கம் தெரிவித்தனர். இந்த வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியானபின், தலைநகர் கொப்பன்ஹேகனில் பல வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.*

*- சிவன் -*

குறித்த நபரிடம் போய்ச் சேராமல், தொலைந்திருக்கின்றன. இதற்கு ஒருவகைத் தணிக்கையே காரணம். இதை அந்த நாட்டு அரசுகளே செய்தது என அறிந்தாலும் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? ஆனால் உண்மையாக சில தபால்கள், அவை கொண்டிருக்கும் உள்ளடக்கம் போதைப் பொருட்கள் போன்றவை என்ற சந்தேகத்தில் திறக்கப் படலாம். இதற்கான சட்டங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடும். நோர்வேயில் அவ்வாறு ஒரு கடிதத்தைத் திறப்பதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவை"

வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் தபால்கள் இலங்கையில் கிழிக்கப்படுவது, தொலைக்கப் படுவது பற்றித் தனது கவலையை வெளியிட்ட நேஷ், சர்வதேசத் தபாற் சட்டங்கள் அரசியல் ரீதியாக எடுக்கப்படும் முடிவுகளுடனேயே பிணைந்துள்ளதால் இப்படியான பிரச்சனையை உடன் தீர்க்க முடியாது என்பதையும் தெரிவித்தார்.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# பாலஸ்தீன விடுதலை எழுச்சி
# இன்ட்டி:பாதா: அரசியல் பகுப்பாய்வு

ஹனன் அஸ்ராவி

இன்ட்டி::பாதா பற்றிய அறிவென்பது அதனளவில் சுமையும் பொறுப்புமாகும். நான் அதிக அளவில் பயணம் செய்து, நான் எப்பொழுதெல்லாம் உரை நிகழ்த்துகிறேனோ, அப்பொழுதெல்லாம் என் மகள் கேட்பாள், அதன் விளைவு பற்றிக் கேட்பாள்: "அம்மா நீ வெளியில் போய் மக்களுக்கு உண்மையைச் சொல்கிறாய். நான் உறுதியாகச் சொல்வேன் மக்கள் உண்மையை அறிந்துகொண்டார்கள் என்றால் நாம் விடுதலை அடைந்துவிடுவோம்".



'Ain el-Hilweh

Naji al-'Ali

இங்கு எனது அழுத்தம் இன்ட்டி::பாதாவின் வரலாற்று அம்சத்தைவிடவும், அதன் அரசியல் அம்சம் பற்றியது. இன்ட்டி::பாதாவின் சாராம்சத்தின் வெளிப்பாடு அதன் அறிவார்த்தம் சார்ந்தது. இதன் பொருள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலஸ்தீனியப் பிரச்சனையைப் பொறுத்து உண்மை மட்டுமே விடுதலையைத் தந்துவிடாது என்று எவ்வாறு உங்கள் குழந்தைக்கு விளக்குவீர்கள்? உண்மை – ஸ்தூலமான அரசியல், யதார்த்தமான உறுதியான நிலைப்பாடு, மனிதவீரம், அசைக்கவியலாத கடமையுணர்வு, மறுபரிசீலனை மற்றும் அமைதியான திட்டமாக வேண்டும் என்பதை உங்கள் குழந்தைக்கு எவ்வாறு விளக்குவீர்கள்?

யதார்த்தத்தில் அமைதியென்பது போர் மற்றும் நெருக்கடி இவைகளைக் காட்டிலும் சிக்கலானது. இது தீவிரமான சிக்கலான இலக்கு. இது போர்நிறுத்தம் ஒய்வு அல்லது தவறை நிவர்த்திப்பது இவைகளின் விளைவிலிருந்து எழுவது அல்ல, இது மிகவேகமாக நடைமுறையியக்கத்தில் இருந்து வெளிவரவேண்டும்.

பெரும்பாலான மக்கள் தங்கள் பாரம்பரியம் தொன்மையான காலத்திலிருந்து பலநூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து வந்தது என்பதை அறிந்துகொள்கிறபோது ஆச்சரியப் படுகின்றனர். பாலஸ்தீன மக்கள் பற்றிய உண்மைகளை, இந்தத் தேசத்தின் தொன்மையான வயதைப்பற்றி அவர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

தொடர்ந்து ஈராயிரம் ஆண்டுகள் கிறிஸ்தவ மதத்தின் இருப்பின் விளைபொருட்கள் நாங்கள். இந்த உண்மையை மனதில் வைக்கவேண்டும்.

மனித உரிமைகளுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் குரல் எழுப்பும் பத்திரிகை நீங்களும் சந்தாதாரராகுங்கள்.
சரிநிகர்
ஒரு வருட சந்தா 15$
6, அலோசாலை கொழும்பு-3 இலங்கை.
SARI NIHAR 6 ALOE AVENUE COLOMBO-3 SRI LANKA

யதார்த்தத்தில் அமைதியென்பது போர் மற்றும் நெருக்கடி இவைகளைக் காட்டிலும் சிக்கலானது. இது தீவிரமான சிக்கலான இலக்கு. இது போர்நிறுத்தம் ஒய்வு அல்லது தவறை நிவர்த்திப்பது இவைகளின் விளைவிலிருந்து எழுவது அல்ல, இது மிகவேகமாக நடைமுறையியக்கத்தில் இருந்து வெளிவரவேண்டும்.

பாலஸ்தீனம் தொன்மையான பெருமிதமிக்க தேசம், நாங்கள் வரலாற்றின் விபத்து அல்ல.

ஒரு சந்தர்ப்பத்தில் பாலஸ்தீன தேசியமும் (Nationhood) இஸ்ரேலிய அரசும் பரஸ்பரம் விலகியவை. ஒன்றை அங்கீகரிப்பது மற்றதை மறுப்பது அல்லது முற்றிலும் நிராகரிப்பது. ஒரு சந்தர்ப்பத்தில் பாலஸ்தீனிய அரசும் பாலஸ்தீனிய சுயாதீனப் பாரம்பரியமும் இஸ்ரேல் அல்லது ஜியோனிஸ கருத்துருவத்திற்கு முற்றிலும் பகையானது, நேர்எதிர்மறையானது.

நாங்கள் இப்போது ஒரு புரிதலுக்கு வந்திருக்கிறோம். பாலஸ்தீனர்கள் என்ற அளவில், பாலஸ்தீன தாயகம் என்பதற்கும் பாலஸ்தீன அரசு என்பதற்கும் இடையிலான வித்தியாசம் பற்றிய புரிதலுக்கு வந்திருக்கிறோம்.

வரலாற்று ரீதியான பாலஸ்தீன மீளாய்வுக் கனவிலிருந்து அதன் நிஜப்பிரிவினை பற்றிப் பேச வந்திருக்கிறோம். வரலாற்று உண்மையிலிருந்து பாதுகாப்பான சுதந்திரமான எதிர்காலத்தைச் சாதிப்பதற்கான எமது பொறுப்பு பற்றிப் பேச வந்திருக்கிறோம். சுயவிளக்க தேசிய எல்லையிலிருந்து உண்மையான, ஸ்தூலமான, பூகோளரீதியான எல்லைகள் பற்றிப் பேச வந்திருக்கிறோம்.


சமரசம் மற்றும் அத்துமீறலின் அடிப்படையிலமைந்த, ஒருபுறம் சமாதானத்

www.tamilarangam.net

தீர்வு மறுபுறம் முரணும் வன்முறையும் முடிவற்ற ரணகளமும் கொண்ட தேர்வுக்கு மாறாக - நாங்கள் சமாதானத்திற்கான மறுபரிசீலனைக்கான சார்பளவில் நீதிக்கான திட்டத்தை முன்வைக்கிறோம். இது எமது வரலாற்றில் ஏற்பட்ட திடீர் கடவுள் பிரசன்னமோ, திடீர் விளைவோ, ரோமானிய விடிவெள்ளியோ அல்ல. இது மிகுந்த வலிமிக்க அரசியல் பகுப்பாய்வு நிகழ்ச்சிப் போக்கினூடே, அடிக்கடி விவாதங்கள், கலந்துரையாடல்கள், சுயவிமர்சனம், சுயக்கல்வியின் மூலம் விளைந்ததொன்றாகும். இது 1974க்கு முன்பிருந்தே தொடங்கியது. பாலஸ்தீனியர்களுக்கு முன்னால் பாலஸ்தீனியர்கள், அவர்கள் தமக்குள் விவாதிப்பதற்காக இரு அரசுத் தீர்வை முன்வைத்தபோதே தொடங்கியது. இந்தத் தீர்வு பாலஸ்தீன சமாதான முன்னெடுப்பின் புறநிலை யதார்த்தமாக ஆனது.

பாலஸ்தீன அரசியலின் சமகாலநிலையில் இரண்டு மைல்கற்கள் உண்டு.

முதலாவதாக 1987 டிசம்பரில் தொடங்கிய இன்ட்டி∴பாதா. மற்றையது பாலஸ்தீன தேசிய காங்கிரஸ் (PNC) 1988 நவம்பரில் அல்ஜீரியாவில் நடந்தபோது வெளியிட்ட தீர்மானங்கள் (resolutions). நான் இன்ட்டி∴பாதா பற்றித்தான் இங்கு அக்கறை கொள்கிறேன். ஏனெனில் அரசியல் திட்டத்தின் மனித சாராம்சம்/ உள்ளடக்கம் அதுதான். இதுதான் சமாதானத்தின் மானுட உள்ளடக்கம். கோபமற்ற இந்த உரையாடலில் இன்ட்டி∴பாதா பற்றிப் பேசுவது மிகச் சிரமமானது. ஏனெனில் இது எமது வாழ்வு தொடர்பானது, எமது எதிர்காலம் தொடர்பானது, எமது குழந்தைகளின் எதிர்காலம் தொடர்பானது. இதுதான் எமது நிகழ்கால யதார்த்தம். இன்ட்டி∴பாதா என்பது வெறுமனே உயிரிழப்பு, மனிதத் துயரம், கொலைகள், சித்திரவதை, இடிந்த வீடுகள், பெயர்க்கப்பட்ட மரங்கள், சிறையில் அடைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானமக்கள் பற்றிய புள்ளிவிவரங்கள் மட்டுமல்ல. ஒரு தேசத்தின் காயத்தை எந்தவொரு வார்த்தையும் முழுமையாக விளக்கிவிட முடியாது. அதைப்போலவே அந்தத் தேசத்தின் மனவலிமையை விளக்கவும் வார்த்தைகள் போதாது. அரசு



www.tamilarangam.net

சுயநிர்ணய உரிமையை நோக்கிய அதன் பயணத்தில் ராணுவ வலிமைக்கு எதிரான மனித சக்தியின் உன்னதத்தை விளக்கிவிட வார்த்தைகள் இல்லை.

இன்ட்டி∴பாதா பாலஸ்தீனியர்களது மட்டுமல்ல அரபு மக்களதும் சுயகௌரவமும் பெருமிதமும் ஆகும். ராணுவ அடக்குமுறைக்கு எதிராக தமது சொந்த உரிமையையும், சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் வேண்டிய மக்களின் குரலாகும் இது. எமது தேசிய உருவாக்கம் மட்டும், எதிர்ப்புணர்ச்சியின் போக்கில் இது தொடர்ந்த இயக்கத்தின் ஆழ்ந்த கட்டமாகும். ஆகவே இது தொடர்ச்சியின் ஒரு பகுதி. இந்தப் போராட்டம் லெபனானில் இருந்த பாலஸ்தீன அகதிகளின் துயரமிக்க போராட்டம் மட்டுமல்ல, எங்கெங்கிருக்கும் அனைத்து பாலஸ்தீன மக்களின் ஒன்றிணைந்த போராட்டத்தின் விளைவாகும். அந்த அளவு இது முக்கியத்துவம் உடையது.

இன்ட்டி∴பாதா ஒரு மாபெரும் பாய்ச்சலாகும். எதிர்ப்பு வரலாற்றில் ஒரு குணாம்ச ரீதியான மாற்றமாகும். 1974, 1981ஆம் ஆண்டுகளில் தோன்றிய இன்ட்டி∴பாதாக்களில் இந்த அளவு நம்பிக்கையும், புதிய பரிமாணமும், இதன் தொடர்ந்த எதிர்ப்புணர்ச்சியும் இருக்கவில்லை.

இது பரந்துபட்ட மக்களின் ஒன்றிணைந்த, அனைத்தும் தழுவிய எதிர்ப்பியக்கம். இஸ்ரேலிய ஆகிகரமிப்பை நிராகரித்த இயக்கம். பாலஸ்தீனியர்களின் மன உறுதியை, உரிமையை, தேசிய முறைமையை உறுதிசெய்த இயக்கம். இது ஆதாரமான எமது வரலாற்று ரீதியான உரிமைகள் மற்றும் அபிலாஷைகளின் யதார்த்த நிகழ்வாகும். மக்களின் குரலாகும். இந்தளவில் இன்ட்டி∴பாதா தேசிய ஒற்றுமையை கீழ்மட்டத்தில்

**ஹனன் அஸ்ராவி பற்றி**

## மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

*ஹனன் அஸ்ராவி பாலஸ்தீனியக் கிறிஸ்தவர்.*
*பேராசிரியர்*
*சிறுகதை ஆசிரியர், ஆங்கிலத்தில் கவிதை எழுதுபவர்.*
*பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வ பேச்சாளர்.*
*லண்டன் PLO அலுவலகத்தில் சிறிதுகாலம் நின்று பணியாற்றியவர்.*
*வளைகுடாப் போரின்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டைக் கடுமையாகக் கண்டித்து தொலைக்காட்சிகளிலும், கல்லூரிகளிலும் உரைநிகழ்த்தினார்.*
*இக்கட்டுரை 'நம்பிக்கையும் இன்ட்டி∴பாதாவும்' எனும் தொகுப்பு நூலில் ஹனன் அஸ்ராவி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.*
*இந்நூலை அமெரிக்காவைச் சேர்ந்த Orbis books பதிப்பகம் வெளியிட்டுள்ளது (ISBN 0-88344-808-4).*

**யமுனா ராஜேந்திரன்**

www.tamilarangam.net

ஏற்படுத்தியது. பன்முகத் தன்மை ஜனநாயகம் போன்றவற்றை ஸ்தூலமான யதார்த்தம் ஆக்கியது. அறிவார்ந்த அல்லது அரசியல் ஆர்வமாகவோ அல்லாது செயல்படும் திட்டமாக, நடைமுறைக்கு ஏற்றதான, தீர்வுகளை எட்டும் தன்மை கொண்டதாக இருந்தது.

தேசிய ரீதியில் ஒன்றிணைந்த தலைமையைக் கொண்டிருந்தோம். இந்தப் போக்கு மரபுரீதியான சமூகங்களில் இருந்த அதிகாரம் மற்றும் ஆதிக்கக் கூறுகளை நிராகரித்து மக்களிடம் இருந்து உருவாகிய ஜனநாயகத் தலைமையைக் கொடுத்தது. நாடுகடந்து வாழும் பாலஸ்தீனியர்கள் என்பதற்கு மாறாக பாலஸ்தீனிய மக்கள் பாலஸ்தீனிய சமூகம் என்பதன் அடிப்படை கொண்டு தனது சொந்த நிலத்துக்கும் அதுவே போராட்டத்தின் ஆதாரதளம் எனும் நிலைப்பாட்டுக்கும் கவனத்தை ஈர்த்தது. ஆக்கிரமிப்பாளன் ஆக்கிரமிக்கப் பட்டவன் எனும் அளவில் கவனம் ஏற்படுத்தியது. அரபு - இஸ்ரேலிய மோதல் பிரச்சனையின் குவிமையமான பாலஸ்தீனப் பிரச்சனையாக, இஸ்ரேலிய பாலஸ்தீன மக்கள் பிரச்சனையாக ஆக்கியது.

அரபு இஸ்ரேலிய பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வு இருக்குமென்றால், அது இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சனையில் இருந்து தொடங்கவேண்டும், பாலஸ்தீனப் பிரச்சனை பற்றிப் பேசவேண்டும், திசைதிரும்பிய வேறு மார்க்கங்களில் இருந்தல்ல மாறாக பாலஸ்தீன அரசுரிமை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றில் இருந்து தொடங்கவேண்டும். இன்ட்டிஃபாதா பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை அதன் ஆயுதரீதியிலான தளத்தில் உறுதிப்படுத்திக் கொண்டு அரசியல் ரீதியிலான தளத்துக்கும் மாற்றியது. பேசித்தீர்க்க வேண்டிய தீர்வையும் அரசியல் திட்டத்தையும் அது வேண்டியது.

1974இல் தொடங்கப்பட்ட இவ்வரசியல் தீர்வு 1988இல் அல்ஜீரியாவில் நடந்த மாநாட்டில் திட்டவட்டமாக்கப் பட்டது. இன்ட்டிஃபாதாவின் செயல்பாடுகள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (P L O) இறையாண்மையை ஸ்தூலமாக்கியது. மக்களிடம் இருந்து ஒருவகையான வெகுஜன வாக்கெடுப்பு மூலம், பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவான மக்கள் பங்கெடுப்பு மூலம், சமூக அடித்தளமும் மக்களின் ஆதரவும் பெற்ற இயக்கமாக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமை உருவாகியது.

சமநிலையற்ற ஒரு போக்கில் இருந்து ஆக்கிரமிப்பாளன் X ஆக்கிரமிக்கப் பட்டவன், ராணுவ வன்முறை X மனித உறுதி எனும் புதிய சமன்பாட்டுக்கு இன்ட்டிஃபாதா வரலாற்றை மாற்றியது. பாலஸ்தீன மக்களின் மனோவளர்ச்சி, அரசியல் பொறுப்புணர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி, சுதந்திரத்துக்கு அர்ப்பணம் செய்தல் போன்றவற்றால் இச்சமன்பாடு உருவாக்கப் பட்டது.

உரிமைக்கும் பலப் பிரயோகத்துக்கும் இடையிலான இந்தப் போராட்டத்தில் நாங்கள் ஒரு கொடிய மிருகத்தை எதிர்கொண்டோம். நாங்கள் பலம் வாய்ந்தவர்கள் எற்று கண்டுகொண்டோம். இந்தச் சுயநம்பிக்கையும் இன்ட்டிஃபாதாவின் நிகழ்வில் தோன்றிய ஒரு ஆன்மபலமும் மனேநிலையுமாக ஆனது. ஒரு வாழ்நிலையாக ஒரு மனோநிலயாக ஒரு ஸ்தூலமான அரசியல் யதார்த்தமாக இன்ட்டிஃபாதா ஆனது. இது தன்னளவில் அதன் நோக்கங்களையும் தானே செயற்படும் தன்மைகளையும் கொண்டிருந்தது. ஏனெனில் தனது சொந்த வரலாறு தனது சொந்த வாழ்க்கை தனது சொந்த யதார்த்தத்தில் இருந்து உருவான மக்களின் நோக்கங்களையும் எழுச்சிகளையும் அது கொண்டிருந்தது.

(இன்னும் வரும்)

www.tamilarangam.net

## மீண்டுவந்தவர்கள்

கடந்த வருட இறுதியில் அரசியல் அகதிகளுக்கான தகுதி மறுக்கப்பட்டு ருமேனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அன்கா ரெய்சானு என்ற பெயருடைய சிறுமியும் அவளுடைய பெற்றோரும் சுவீடனுக்குத் திரும்பிவர சுவீடனின் குடிவரவுக் காரியாலயம் அனுமதி வழங்கியதையடுத்து, அவர்கள் ஏப்ரல் எட்டாம் திகதி அவர்கள் நாடு திரும்பினர். தீர்க்கமுடியாத ஒரு நோயால் (Rctts syndrom) அந்தச் சிறுமி பாதிக்கப் பட்டதுடன், அவளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை ருமேனியாவில் பெற முடியாது என்பதாலேயே அவள் திரும்பிவர அனுமதிக்கப் பட்டதாக சுவீடன் அரசு அறிவித்தது. ஆனால் இச்சிறுமியின் நிலைமை பற்றிப் பத்திரிகைகள் அண்மைக் காலத்தில் கடுமையாக விமர்சித்ததாலேயே, குடிவரவுக் காரியாலயம் இந்த முடிவை எடுத்திருப்பதாக நம்பப் படுகிறது.

## அதிக முதியோர்

சமீபத்தில் அமெரிக்க நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி சுவீடனின் சனத்தொகையில் 18வீதம்பேர் 65வயதுக்கு மேற்பட்டோர் எனத் தெரியவருகிறது. இந்த அறிக்கைக்காக நடத்தப்பட்ட கணிப்பின்படி உலகிலேயே 65வயதுக்கு மேற்பட்டோர் அதிகம் வாழும் நாடு சுவீடன்தான். ஐரோப்பிய நாடுகளில் சராசரியாக 14%பேர் 65 வயதுக்கு மேற்பட்டோர். அமெரிக்கா, ஜப்பானில் 13% பேர் 65 வயதுக்கு மேற்பட்டோர். ஆசிய நாடுகளில் சராசரியாக சனத்தொகையின் 4.8%உம், ஆபிரிக்க நாடுகளில் சராசரியாக 2.7%உம் 65 வயதுக்கு மேற்பட்டோராவர்.

சாள்ஸ்.ஜெ.போமன்



## பெரியது கேட்பின்......

உலகில் தற்போது சனத்தொகை அடிப்படையில் பெரிய நகரமாக டோக்கியோ விளங்குகிறது. ஐ.நா. கணிப்பு ஒன்றின்படி தற்போது டோக்கியோவின் சனத்தொகை இரண்டு கோடியே 58லட்சம்.

அடுத்த இடத்தில் வருவது சாவோ பாலோ (பிரேசில்). இதன்சனத்தொகை ஒருகோடியே 92லட்சம். நியூயோர்க் மூன்றாவது இடத்தையும் (ஒருகோடி 62லட்சம்), இருவருடங்கள் முன்னதாக முதலிடத்தில் இருந்த மெக்சிக்கோ நகர் நான்காவது இடத்தையும் (ஒருகோடி 53லட்சம்), சீன நகர் ஷங்காய் ஐந்தாவது இடத்தையும் (ஒருகோடி 41லட்சம்) பெறுகின்றன.

– சங்கரன் –

www.tamilarangam.net

ராமா, சற்றுத் தாமதம்தான், என்றாலும் நீ பதில் எழுதியதையிட்டு மகிழ்ச்சி. ஆனால் என் கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் கூறுவதைத் தவிர்த்துள்ளாய். உனது கடிதத்தில் சில விடயங்கள் முன்பின் முரணாயும் இருப்பது போல் தோன்றுகிறது. ராமா, நீ நாட்டில் இருந்ததைப் போலவே இப்போதும் கொம்யூனிசத்தின்மீது நம்பிக்கை கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளதும், முன்னாள் சோவியத் யூனியனதும் 'வீழ்ச்சி'களை மாத்திரம் கருத்தில் கொண்டு கொம்யூனிசத்தை மதிப்பிடும் பல புத்திஜீவிகளுக்கு மத்தியில் உனது நம்பிக்கைகள் வெற்றியைத் தரட்டும்.

ஆனால், வெறுமனே கொம்யூனிசம் கொம்யூனிசம் என்று கத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. அச்சித்தாந்தங்கள் நடைமுறையில் சரியாகப் பிரயோகிக்கப்பட வேண்டும். இல்லையேல் இன்றைய யூகோஸ்லாவியாவில் நிகழும் சம்பவங்களும், நாளை ரஷ்யாவில் நிகழவுள்ள சம்பவங்களும் எமக்கு ஒரு பாடமாய் அமையும். ஒரு நாட்டின் பொருளாதாரம், அரசியல், பூகோளம், சமூக கலாசாரப் பின்னணிகளைக் கொண்டே கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த இயலும்.

மூன்றாம் உலக நாடுகளது பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு மாத்திரமன்றி, இலங்கையில் உள்ளது போன்ற இனப்பிரச்சனைக்கும் கொம்யூனிசம் தீர்வாக அமையும். ஆனால் லெனினதும், மாவோ சே துங்கினதும் செயற்திட்டங்களை நாம் அப்படியே பின்பற்றவேண்டிய அவசியமில்லை. எமது நாட்டின் சூழ்நிலைக்கேற்பவே அவற்றைப் பிரயோகிக்க வேண்டும். ஆனால் இதற்கான திட்டங்களை யாரும் சரியாக முன்வைத்துச் செயற்படவில்லை.

ராமா, தமிழ்மொழிபேசும் மக்களது நலனில் அக்கறையுள்ள எவருமே வடக்கு கிழக்குப் பிரிக்கப் படுவதை விரும்ப மாட்டார்கள். நானும் இதற்கு விதிவிலக்கில்லை. ஆனால் கடந்த காலப் படிப்பினைகள் எமக்கு எதைப் புலப்படுத்துகின்றன? புலிகளால் பலவந்தமாக, மனிதநாகரிகத்துக்கு முற்றிலும் முரணான வகையில் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள், நிபந்தனையற்ற முறையில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டுமென நீ கூறுவது, பாதிக்கப்பட்ட முஸ்லிம்

ஆவணச் சுவடிகள்

## ராமனுக்கு அப்பளாச்சாரியாரின் பகிரங்கக் கடிதம்

www.tamilarangam.net

மக்களுக்கு ஆறுதலாக அமையலாம். ஆனால் நடந்ததற்கு இது பரிகாரமல்ல. நாம் நினைத்தால் முஸ்லிம் மக்களை வெளியேற்றவும், பின் 'சூழ்நிலை காரணமாக' அவர்களை மீளழைக்கவும், முஸ்லிம் மக்கள் 'ஐந்தறிவு மனிதர்கள்' அல்லர். வடக்கு கிழக்கு அவர்களதும் தாயகம். யாரோ ஒருசிலரது தவறுக்காக எல்லா முஸ்லிம் மக்களையும் சந்தேகிப்பது மிகத்தவறு. கிழக்கில் தமிழ் இயக்களின் முஸ்லிம் மக்கள் மீதான வன்முறைகளும், முஸ்லிம் ஊர்காவற் படைகளது தமிழ் மக்கள் மீதான காடைத்தனமும், கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிரந்தரப் பகைக்கு வழிவகுத்துள்ளன. பௌத்த சிங்கள பேரினவாதிகளது ஒடுக்குமுறைக்கு எதிராய்ப் போராடும் நாம், எம்மத்தியில் வாழும் சிறுபான்மை முஸ்லிம் மக்கள்மீது இயக்கப் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளமை தமிழ்ப் பேரினவாதத்தின் உச்சநிலையே.

வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களது சுயபாதுகாப்பும், தேசிய அந்தஸ்தும் கௌரவிக்கப்படல் வேண்டும் என வெறுமனே ஏட்டளவில் கூறுவது பயனே தராது. அத்தகைய சுயபாதுகாப்பும், தேசிய அந்தஸ்தும் எந்த ரீதியில் அமையமுடியும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு முஸ்லிம் மக்களுக்கேயன்றித் தமிழ் மக்களுக்கோ, தமிழ் இயக்கங்களுக்கோ கிடையாது. அவர்கள் விரும்பும் தீர்வு, வடக்கு கிழக்கு இணைவுக்குள் முஸ்லிம் மக்களுக்கான பிரதேசங்கள் இணைந்த சமஷ்டித் தீர்வாகவோ, அல்லது கிழக்கில் பெரும்பான்மையாக உள்ள முஸ்லிம் மக்களது விருப்பப்படி - வடக்கு கிழக்கு தனித்தனியான சமஷ்டித் தீர்வாகவோ சாத்தியமாகலாம்.

ராமா, நான் கூறிய இந்தத் தீர்வுகள் வெறும் பாராளுமன்றத் தீர்வாக மாத்திரமே அமைய வேண்டியதில்லை. புரட்சிகர சக்திகளை ஒன்றுதிரட்டிய வெகுஜனப் போராட்டத்தின் மூலமும் சாத்தியமாகலாம். என்னைப் பொறுத்தவரை வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு எத்தகைய அரசியல் தீர்வு காணப்பட்டாலும், அது முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்ததாகவே இருக்க வேண்டும் எனக் கருதுகிறேன். சிங்கள ஒடுக்குமுறையைக் காட்டித் தமிழீழத்துக்கு ஆதரவாக முஸ்லிம் மக்களைத் திரட்டிய காலம் மலையேறிவிட்டது. சுயபாதுகாப்பு, தேசிய அந்தஸ்து அவர்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம், அம்மக்களின் சுயநிர்ணய உரிமையாகும். அவர்களை வென்றெடுக்க வேண்டியது அரசியல் ரீதியாகவன்றி, வன்முறையாலல்ல.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு சாத்தியம் என்பது "வெறும் பம்மாத்து" என நீ நிராகரித்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. நீ சமகால அரசியல் சூழலையும், யதார்த்தத்தையும் புரிய மறுப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. பிராந்திய, சர்வதேச ரீதியாக தமிழ் (மொழிபேசும்) மக்கள் வேண்டப்படாத விருந்தாளிகளாக, அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எமது பிரதேசம் தினமும் பறிபோகிறது. இந்நிலையில் சில வருடங்களில் எமக்குரிய தனித்தேசிய அந்தஸ்தும், தாயகக் கோட்பாடும் தேவையற்றுவிடும். குறைந்தது எமது போராட்டத்தை மறுசீரமைக்கவாயினும் எமது உரிமைகளைக் கூடியபட்சம் அங்கீகரிக்கக் கூடிய ஓர் இடைக்காலத் தீர்வு அவசியம். இல்லையேல் "அயர்லாந்து" நிலைமைதான் நமக்கும் ஏற்படும். இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவருவது, இலங்கையின் பொருளாதார அரசியல் அடித்தளத்தையே முற்றாக மாற்றுவதாகும் எனக் கூறியுள்ள நீ, அத்தகைய மாற்றம் சாத்தியமற்றது எனக் கூறியுள்ளாய். இத்தகைய முயற்சிகள் தென்னிலங்கையிலேயே ஆரம்பிக்கப்

www.tamilarangam.net

பட்டிருக்க வேண்டும் என்பது உண்மையே, ஆனால் அதற்கான பொது வேலைத் திட்டத்தை உருவாக்கிப் பங்காற்ற வேண்டியது நமதும் கடனாகும். ஆனால் தமிழரது அன்றைய பாராளுமன்றத் தலைமையில் இருந்து இன்றைய இயக்கங்கள்வரை, இனவாத மற்றும் ஏகாதிபத்திய பிற்போக்குத் தலைமைகளுடன் சமரசம் செய்வதிலேயே காலத்தைக் கடத்தின என்பதை நீ அறிவாய்.

ராமா, வரலாற்றுச் சக்கரங்கள் பின்னோக்கிச் செல்வதில்லை. சிங்கள மக்களுக்குக் கடந்த காலங்களின் கசப்பான (முக்கியமாகத் தமிழ் இயக்களால் நிகழ்த்தப்பட்ட சிங்கள மக்கள் மீதான படுகொலைகள்) அனுபவங்கள், அவர்களிடையே புதிய தேடலை வலியுறுத்துகின்றன. இதன் விளைவே முன்னெப்போதும் இல்லாதவாறு, பல முற்போக்கு அமைப்புகள் சிங்கள மக்கள் மத்தியில் தோன்றியமை. இவ்வாறான அமைப்புகள் பல தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி வருகின்றன. இந்த சக்திகள் நலிவுற்ற நிலையிலேயே உள்ளன. எனினும் இவ்வாறான சக்திகளுடன் இணைந்து பொதுவேலைத் திட்டங்களில் வேலை செய்வதன்மூலமே, தேசவிரோத சக்திகளை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்த முடியும்.

இதற்கு நல்ல உதாரணம், அண்மையில் எரித்திரியாவின் அனுகுமுறையாகும். எரித்திரியப் போராளிகளும், எதியோப்பியப் புரட்சிக் குழுக்களும் மேற்கொண்ட பொது உடன்படிக்கை, இன்று உலகப்படத்தில் விடுதலை பெற்ற எதியோப்பியாவின் அருகில், எரித்திரியாவும் இடம்பெற வழிவகுத்துள்ளது. எரித்திரியா என்ற தனிநாடு தோன்றுவது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகிவிட்ட போதும், தனித்தமிழ் ஈழம் என்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது ஆய்வுக்குரிய விடயம்.

# காதுகுத்தல்

## ஜீவிதன்

*காதுகுத்தி கடுக்கனும் செய்து*
*கலியுகத்து அசுரர்தம் கையால்*
*'தோடு' என்று சொல்லித் தந்தார்*
*தொண்டரவர்.*

*கேடுகெட்ட மனிதரென்று*
*வெளிநாட்டில் உள்ளோரை*
*சூடுபறக்க*
*ஏசித் திரிந்தார்*
*மேடைசெய்தார்*
*அவர்கள் காசில்*
*ஆயுதம், ஆபரணம்*
*காணி, நிலம், வீடென்று*
*ஈடுசெய்தார்.*

*சூடுகண்ட பூனை மக்கள்*
*அவர்துயர் யாருரைப்பார்*
*கூடுவிட்டுக் கூடு தாவி*
*இலக்கியமென்று*
*ஏடு இட்டுத் தந்தார் பெரும்கவி.*
*மார்புதட்டி*
*மாண்டுபோன மனிதம் கண்டால்*
*பேடு ஏது*
*கடுவனேதென்று*
*கூறுபோட்டுப் பாருமென்றார்*
*குறியும் தெரியவில்லையென்றால்*
*யாரு? என்ற*
*கேள்வி ஒன்றே போதுமென்றார்*
*இதற்கு மேலென்ன?*

*பாடுபட்ட ஏசு*
*ஞானம்பெற்ற புத்தன்*
*சூடுபட்ட காந்தி*
*வீடற்ற பரதேசி, விளக்கெண்ணெயென்று*
*விளங்கவா போகுதவர்க்கு*
*காதுகுத்தும்*
*நன்றாகக் குத்தும்*
*பூவும் வேறு இருக்கிறது*
*புரியாதா எமக்கு?*

www.tamilarangam.net

ஏனெனில் அரசியல், பூகோள, பொருளாதார ரீதியாக தமிழீழம் எவ்வளவுதூரம் சாத்தியம் (எவ்வளவு தாக்குப் பிடிக்கும்?) என்பதில் எனக்குக் கேள்விகள் உள்ளன. இது தொடர்பாகப் போதிய ஆய்வுகள் இல்லையென்றே தோன்றுகிறது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு சாத்தியமாகப் பின்வரும் நிபந்தனைகள் உள்ளன.

1. இன முரண்பாடுகளைக் கவனத்தில் எடுத்து, இலங்கையின் அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.


2. சிறுபான்மைத் தேசிய இன மக்களின் சுயபாதுகாப்பும், தேசிய அந்தஸ்தும் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

3. இலங்கை பல்லின, பலமத, பலமொழி நாடு என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இது அசாத்தியம் என நினைக்கலாம். முயன்றால் முடியாததில்லை.

ராமா, புரட்சியாளர்களை ஒன்றுபடுத்தித் தெளிவான அரசியல்ச் சிந்தனையுடன் வெகுஜனப் போராட்டத்தை முதன்மைப் படுத்திப் போராட முனைந்தால் எத்தகு எதிர்ப்பையும் முறியடிக்கலாம்.

தொடர்ந்து எழுது, விமர்சன ரீதியான கருத்துப் பரிமாற்றம் இன்று எம் ஒவ்வொருவருக்கும் அவசியம்.

இப்படிக்கு நண்பன்,
அப்பளாச்சாரியார்



மேலே உள்ள படம் கடந்த செப்டெம்பர் மாதம் 16ம் திகதி ருஸ்சிய தொலைக் காட்சியில் காண்பிக்கப்பட்டது. இறந்து கிடக்கும் மனிதர் ஹிட்லர் எனச் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட அதே தோற்றமுடைய படத்துண்டு சில செக்கன்களே காண்பிக்கப்பட்டது. இது பற்றி ருஸ்சிய வரலாற்றாளர் கூறுகையில் "சோவியத் படையினர் மே 4ம் திகதி 1945ம் ஆண்டு ஹிட்லரினதும் அவரது மனைவி Braun இனதும் உடலைக் கண்டு பிடித்ததாகவும் இவர்கள் இந்தத் தினத்திற்கு 4 நாட்களிற்கு முன்னர் தற்கொலை செய்து கொண்டு இருக்க வேண்டும் உடனடியாக இவரது சடலம் எரிக்கப்பட்டது" என்றும் தெரிவித்தார்.

## மர்மம் துலங்கிவிடும்

**— சாகுந்தலன் —**

இரண்டாம் உலகப் போரின் கதாநாயகனும் கொடிய சர்வாதிகாரியுமான ஹிட்லருக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது பற்றியும் அவரது உடலுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் இதுவரை காலமும் மர்மமாகவே இருந்து வந்தது.

www.tamilarangam.net

# இலங்கை அரசியலைக் கேள்விக்குறியாக்கிய இரு மரணங்கள்

தேரோட்டி

கடந்த 23.04.93 அன்று இரவு, மாகாணசபைத் தேர்தலுக்காய், கிருலப்பனையில் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (டியுஎன்எஃப்) தலைவர்களில் ஒருவரான அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப் பட்டார். சுட்டவர் எனக் கருதப்படும் நபரின் சடலம் கொலை நிகழ்ந்த இடத்துக்கு அண்மையில் நூறுயார் தொலைவில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும், சயனைட் அருந்திய நிலையிலும் கிடந்ததாக செய்திகள் கூறுகின்றன. சயனைட் அருந்தியதாலேயே அந்த நபர் மரணமடைந்தாரென வைத்திய அறிக்கை தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உட்படப் பல எதிர்க் கட்சிகள் பிரேமதாசாவே இக்கொலைக்குக் காரண கர்த்தா எனக் குற்றம் சாட்டின. அரசுடன் சேர்ந்து இயங்கிவரும் தமிழ்க்குழுவான ஈபிடிபியைப் பயன்படுத்தியே இக்கொலை புரியப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளதுடன், அக்குழுவிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளன. வாசுதேவ நாணயக்கார, இந்நாட்டில் ஜனநாயகத்திற்கு இடமில்லை, எனவே அனைத்துக் கட்சிகளும் இணைந்து பிரேமதாசா பதவிவிலகக் கோரிக்கைவிடல் வேண்டும் என்றார். இதையடுத்து மாகாணசபைத் தேர்தல்கள்



www.tamilarangam.net

முடியும்வரை தமது செயற்பாடுகளை இடைநிறுத்திக் கொழும்பிலிருந்து இராணுவ முகாம்களுக்குச் செல்வதாக ஈபிடிபி அறிவித்தது.

இலங்கையரசின் ஆளுகைக்கு உட்பட்ட செய்தித் தாபனங்கள், பல தற்கொலைக் கொலையாளிகள் கொழும்பினுள் பிரவேசித்திருப்பது தெரியவந்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்தியை அறிவித்ததுடன், லலித்தைக் கொலை செய்தவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினரே என அடித்துக் கூறின. சந்தேக நபரின் அடையாள அட்டையை வைத்துக் கொலையாளி யாழ் குடாநாட்டைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணன் என்றும், புலிகளின் கொலைப் பட்டியலில் லலித் முதலிடத்தில் உள்ளார் எனவும் கூறின. கொலையாளி எனக் கூறப்பட்ட நபர் பற்றி அறிவிக்கையில் இந்தச் செய்தி நிறுவனங்களிடையே பல முரண்பாடுகள் நிலவின. 24.04.93அன்று இலங்கை வானொலி தன் மாலை ஆறுமணிச் செய்தியில், கொலையாளியின் சடலம் சம்பவத்திற்கு மறுதினம் நண்பகலின் பின்பு கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறியது. ஆனால் ரூபவாஹினியோ சம்பவம் நடந்த அன்றிரவே சடலம் கண்டுபிடிக்கப் பட்டதாகக் (மாலை ஆறரை மணிச் செய்தியில்) கூறியது. 25.04.93 காலை ஆறுமணிச் செய்தியில் வானொலி, சடலம் சம்பவத்திற்கு மறுநாள் காலை கண்டுபிடிக்கப் பட்டதாகக் கூறியது. கொலையாளி புலி என்பதற்கான சான்றுகள் எதையும் இவை கூறவில்லை. பின்பு அடையாள அட்டையில் இருந்தது போலிப் புகைப்படம் என அறியப்பட்டதும் இச்செய்தி ஸ்தாபனங்கள் மௌனித்தன. பின்பு நிகழ்ந்த பத்திரிகையாளர் சந்திப்பில் இதுபற்றிக் கேள்வியெழுந்ததில், ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க இதுபற்றி ரூபவாஹினித் தலைவரை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

> பிரேமதாசாவுக்கும் இக்கட்சிப் பிரமுகர்களுக்கும் ஏற்பட்ட சாடலின்போது பல தகவல்கள் வெளிவந்தன. அவற்றிலொன்று அருங்களஞ்சியமாக விளங்கிய யாழ்நூலக எரிப்பில் பிரேமா, லலித், காமினி ஆகியோரே ஈடுபட்டனர் என்பது.

சந்தேக நபரே கொலையாளி என டியுஎன்எ:ப் கிருலப்பனை அமைப்பாளர் அடையாளங் காட்டினர் என்ற இலங்கை வானொலியின் செய்தியைக், குறிப்பிட்ட நபர் மறுதலித்தார். கொலையாளியை நேரில் கண்ட ஆறு நபர்களில் நால்வர், சந்தேக நபரே கொலையாளி என அடையாளங் காட்டினர் எனக் கூறிய காவற்றுறை அதிகாரி (டி.ஐ.ஜி) ஒருவர், சந்தேக நபர் தமிழரா சிங்களவரா என இப்போது கூறமுடியாது என்றார். கொலையைத் துப்புத்துலக்க இலங்கைக் காவற்றுறையினருக்கு 'ஸ்கொட்லண்டயார்ட்'ஐச் சேர்ந்த நால்வரை இலங்கை அரசு வருவித்துள்ளது.

இலண்டனில் புலிகள், இக்கொலைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை எனவும், அப்பையா பாலகிருஷ்ணன் என்பவரைத் தமக்குத் தெரியாது என்றும் அறிவித்தனர்.


இலங்கை அரசியலில் படித்தவர் எனப் பெரும்பான்மையினரால் மதிக்கப்படும் லலித், பல அமைச்சுப் பதவிகளை வகித்திருந்தாலும் தேசியப் பந்தோபஸ்து அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேயே பிரபலமானார். தமிழ் மக்களின் ஏகோபித்த வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார். 1983யூலையில் வெலிக்கடைச் சிறையில் 52 தமிழ்க் கைதிகள் கொலையாகக் காரணமானவர் இவரே என மக்கள் பரவலாகப் பேசிக் கொண்டனர். 1991 ஒகஸ்ற்றில் பிரேமதாசாவின்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத் தோல்வியை அடுத்து லலித்,

www.tamilarangam.net

பிரேமச்சந்திரா, காமினி ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டனர். பின்பே இவர்கள் மூவரும் டியுஎன்எஃப்ஐத் தோற்றுவித்தனர். இதையடுத்து பிரேமதாசாவுக்கும் இக்கட்சிப் பிரமுகர்களுக்கும் ஏற்பட்ட சாடலின்போது பல தகவல்கள் வெளிவந்தன. அவற்றிலொன்று அருங்களஞ்சியமாக விளங்கிய யாழ்நூலக எரிப்பில் பிரேமா, லலித், காமினி ஆகியோரே ஈடுபட்டனர் என்பது.

இவரது கொலையை அடுத்து, இலங்கை அரசின் செய்தித் தாபனங்கள் இக்கொலையைப் புலிகள்மீது சுமத்த முற்பட்டமை போன்றவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, பிரேமதாசாவுக்கு இக்கொலையுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது என்றே தோன்றுகிறது.

லலித், பிரேமதாசாவுக்கு மிக வலிமைமிக்க அரசியல் எதிரியாக விளங்கினார். புலிகளுக்கு பிரேமதாசா ஆயுதம் வழங்கியதை வெளிக்கொணர்ந்தார். சிங்கள மக்கள் மத்தியில் கதாநாயகனாக விளங்கிய டென்ஸில் கொப்பேகடுவவை, பிரேமதாசாவே புலிகளுடன் சேர்ந்து கொலை செய்ததாகப் பிரசாரம் செய்தார். தனது சிறந்த பேச்சாற்றலால் இனவாத அலையைச் சிங்கள மக்களிடையே எழுப்பினார். இவ்வகைச் செயற்பாடுகளால் குறுகிய காலத்திலேயே சிங்கள மக்களிடையே செல்வாக்குப் பெற்று, பிரேமதாசாவுக்குப் பெரும் போட்டியாளராக விளங்கினார். மேலும் லலித்தின் கல்விப் புலமை, அவரை பிரேமதாசாவைவிட ஒருபடி மேலேயே வைத்திருந்தது. இவைகளால் 1994 இறுதியில் நிகழவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் லலித் போட்டியிட்டால், தான் தோல்வியுற நேரும் என்ற அச்சம் பிரேமதாசாவின் மனதில் எழுந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் கொப்பேகடுவ போட்டியிடலாம் என்ற



www.tamilarangam.net

செய்தி பரவலாகப் பேசப்பட்ட சமயத்திலேயே அவர் உயிரிழந்தார். இதற்குப் பிரேமதாசாவின் செயலே காரணம் என இன்னும் பல சிங்கள மக்கள் நம்புகிறார்கள். தனக்கெதிராக மேற்கொள்ளப்படும் விடயங்கள் அனைத்திலும், தான் முந்திச் செயற்பட்டு, எதிரிகளை எவ்வகையிலேனும் கருவறுப்பவர் பிரேமதாசா என்பது அனைவரும் அறிந்த விடயம்.

லலித் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானபோது அதிகூடிய விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வென்றதும், அவர் இறந்ததைக் கேள்வியுற்று அவரது உடலத்தை இறுதியாகத் தரிசிக்க வந்தவர்களின் எண்ணிக்கையும் அவரது செல்வாக்கிற்குச் சான்றாகும். லலித்தின் இறுதி ஊர்வலத்தில் பத்துலட்சம் மக்கள் கலந்துகொண்டதாக டியுஎன்எஃப் அறிவித்திருப்பினும், இரண்டரை லட்சம் மக்கள் வரையில் கலந்துகொண்டதாக சுயாதீன செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன. இலங்கை அரசின் ஆளுகைக்குட்பட்ட செய்தி நிறுவனங்கள் இலங்கை அரசின் விருப்பப் படியே செயல்படுவன என்பது, தமிழர் கூட்டணித் தலைவர்களான அமிர், யோகேஸ் கொலையால் அனைவரும் அறிந்த ஒன்று. மேலும் உடனடியாக ஸ்கொட்லண்டயார்ட் துறையினரை வரவழைத்தமையும், மக்கள் மத்தியில் தன்மீது நல்லெண்ணத்தை எழுப்பி, இக்கொலையைத் திசைதிருப்பப் பிரேமா மேற்கொண்ட தந்திரம் போன்றே தோன்றுகிறது. ஸ்கொட்லண்ட்யார்ட் தனிப்பட்ட ரீதியில் துப்புத் துலக்காது, இலங்கைக் காவல்துறையினருக்கு உதவவே வந்துள்ளனர் என்பது இச்சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

பிரேமதாசா, இக்கொலைக்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்றும், தான் ஓர் அப்பாவி என்றும், டியுஎன்எஃப் தலைமைப் போட்டியில் லலித் வெற்றி பெற்றதால் உட்கட்சிப் படுகொலையாகவும் இருக்கலாம் எனவும் கூறியதுடன், நல்லகாலம் என்னைக் குற்றவாளியாகக் காணும் எதிர்க் கட்சியினர், காந்தியையும் நெல்சன் மண்டேலாவின் சகாவையும் கொலை செய்வித்தவனும் நானே எனக்

---

## உயர்வுள்ள உரிமைகள்.......

உள்ளம் கறுத்துவிட்டதற்கு
அடையாளமாய்....
வானம் கறுத்துவிட்டது....
கறுத்த சொக்ஸ் அணிந்து
கறுத்த சப்பாத்துக் கொழுவி
கறுத்த ஆடை போட்டு
கறுத்த துப்பாக்கி ஏந்திவிட்டார் ள.
இனிக் கறுப்பு மனிதர்களை' சுட்டு
கறுப்பு இரத்தம்
எடுக்கவேண்டும்....?!

யார் சொன்ன அப்படி....
உறுமலாய் ' ரிமைகள்!
நினைத்த மனிதரை
நினை ந்த நேரத்தில்
நி னைத்தபடி சுடுவோம்.

வார்த்தை காயமுன்....
வானத்தை மூடிய வானூர்தி....ப்படை ஒன்று..
சின்னவன்
கையில் சிறை இருந்த கறுப்பு இயந்திரம்
நடுக்கமாய் ஆடியது....
வில் தட்டுப்பட வேட்டுக்கள் தீர்ந்தன...
தடுமாறித்..... தவறி...
பக்கத்தில் நின்ற பாவி மக்களை
பதம் பார்த்தது குண்டுக் குழுக்கள்
நாளை பத்திரிகை
நிச்சயமாய் இதனைப் பிரசுரிக்கும்....
"மக்களுக்காக, மக்களை மக்கள்
ஆளுவதே..... ஜனநாயகம்"

**இளைய அப்துல்லாஹ்**
**இலங்கை**

www.tamilarangam.net

கூறாது விட்டுவிட்டனர் என்றார். இவ்வளவு பேச்சுகளும் திசைதிருப்பும் உத்தி போன்றே தோன்றுகிறது. காந்தியும், மண்டேலாவின் சகாவும் இலங்கையில் பிறந்து, பிரேமதாசாவுக்கு எதிராகச் செல்வாக்குப் பெற்றிருப்பின் அவ்விருவரையும், பிரேமதாசாவே தீர்த்துக் கட்டியிருப்பார் என்று எண்ணவே, பிரேமதாசா காலத்தில் இடம்பெற்ற அரசியற் கொலைகள் இடம் கொடுக்கின்றன.

பிரேமதாசா கூறியிருப்பது போல சில வேளைகளில் உட்கட்சிக் கொலையாகவும் இருந்திருக்கலாம். அனுதாப அலையை மக்கள் மத்தியில் தோற்றுவித்து மாகாணசபைத் தேர்தல்களில் வெற்றியிட்டவும், உட்கட்சிப் பூசல்கள் காரணமாகவும் - ஒரே கல்லில் இரு மாங்காய்கள் என்ற நோக்கில் - நிகழ்ந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டென்பதை மறுப்பதற்கில்லை.

புலிகள் இக்கொலையைச் செய்திருப்பதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே. லலித்தைக் கொலை செய்வது புலிகளின் நோக்கமெனில், அவர் ஐதேகவைவிட்டு வெளியேறிய காலகட்டத்திலேயே புலிகள் இதனைச் செய்திருப்பார்கள். மேலும் லலித் மாத்திரமே கொலையுண்டமையும், கொலை செய்யப் பட்டதாகக் கூறப்படும் வழிமுறையும் புலிகள் செய்திருப்பார்கள் என்ற ஐயத்தை மட்டுப்படுத்தவே செய்கின்றன.

லலித்தின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களால் வன்முறைகள் மேற்கொள்ளப் பட்டன. பல வாகனங்கள் தீயிடப் பட்டன. பல கட்டிடங்கள் சேதமாக்கப் பட்டன. வாகனங்கள் தீயிடப் பட்டன. தீயை அணைக்க வந்த தீயணைப்பு வண்டி ஒன்றும் கொழுத்தப் பட்டது. காவல்துறையினரால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யப்பட்டுச், சுடப்பட்டதில் ஒருவர் பலியானார். சிலர் காயமுற்றனர். இதுபற்றி காமினி திஸாநாயகா, காவல்துறையினரின் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தாலேயே அமைதியாகச் சென்றவர்கள் வன்முறையில் இறங்க நேரிட்டதாகவும் ஒரு மயானத்துள் தகனக்கிரியைகள் நிகழ்கையில் கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப் படுவது தானறிந்தவரை இதுவே முதல்தடவை எனவும் கூறினார். ஆனால், வன்முறைக்கென்றே ஒரு குழு ஊர்வலத்தில் சென்றதுபோல் தோன்றியதாக பிபிசி நிருபர் கூறினார். ஆளுமை நிறைந்த ஒரு தலைவரை இழந்துவிட்டதாக எண்ணியிருந்த சிங்கள மக்கள் மத்தியில் இவ்வன்முறைகள் இலங்கை அரசியலில் வன்முறைகள் நிரந்தர இடத்தைப் பிடித்துவிட்டதான எண்ணத்தையே உருவாக்கி, இலங்கையின் அரசியல், எதிர்காலத்தில் மிகப்பெரிய ஒரு கேள்விக்குறியே என்ற உணர்வைத் தோற்றுவித்துள்ளன.

வடகிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்த மரணம் கவலையைத் தோற்றுவித்திராது என உறுதியாக நம்பலாம.

(இரண்டாம் பாகம் அடுத்த இதழில்)

பனிமலர்
BM PANIMALAR,
London
WC1N 3XX
UK

அ ஆ இ
A AA IE,
Post bus 85326,
3508 A H Utrecht,
NEDERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்நாட்டில் உள்ள ஈழ அகதிகள் இப்பொழுது இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளனர். ஈழத்தின் ரத்தவாடை வீசும் தாயகத்திற்குச் செல்வதா? நாள் தோறும் தமிழ்நாடு காவல்துறையாளராலும், ரவுடிகளாலும் அவமானப்படுத்தப் பட்டபோதும், சுயமரியாதையை இழந்து அல்லது சகித்துக்கொண்டு இங்கேயே வாழ்வதா? முடிவெடுப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. தாயகத்திலும், தஞ்சம் புகுந்த இடத்திலும் நடைமுறை எதார்த்தம், அகதிகளின் விருப்பத்திற்கு எதிராகவே உள்ளது. அவமானங்களைச் சகித்துக்கொண்டு, உயிர்பிழைத்தால் போதும் என்று தமிழகத்தில் இருக்கும் ஈழ அகதிகள் இன்று ஒரு பெரும் பிரச்சனையை எதிர்நோக்கும் கட்டாயத்தில் உள்ளனர்.

அவர்களே கூறுகிறார்கள்..... "இனியும் கொலை, கொள்ளையில் அகதிகள் ஈடுபடுவார்களேயானால், முகாம்களைவிட்டு எவரும் வெளியேறாதபடி தடுப்புகள் அமைக்கப்படும். அத்துடன் அகதிகள் அனைவரதும் கைரேகைகள் பதிவு செய்யப்படும்"

வருங்காலத்தில் இது நடைபெறலாம்; அகதிகள் கிரிமினல்களாகக் கருதப்பட்டு, கைரேகைகள் பதிவு செய்யப்பட்டு, முகாம்களில் முடக்கப் படலாம். இதுகுறித்து தமிழக அரசியல் கட்சிகளும், ஆதரவளித்த தனிநபர்களும் என்ன சொல்கிறார்கள்? மூச்.....!

<u>தலைமறைவு வாழ்க்கையின் கடைசிநாள்</u>

இந்தியப் புரட்சிக்கு மக்களை ஆயுதப் பாதையில் அழைத்துச் சென்ற கொண்டபள்ளி சீத்தாராமையா மார்ச் 20ஆம் திகதி அனுமனபடி என்ற கிராமத்தில் எந்த எதிர்ப்பும் இல்லாமல் கைது செய்யப் பட்டார்.

"இந்தா பிடிச்சுக்கோ" என்பதுபோல் தூங்கிக் கொண்டிருந்தவரை, தட்டி எழுப்பி போலீஸ் கைது செய்தது என்று ஒரு செய்தி.

எது எப்படியிருந்த போதிலும், அவர் இப்பொழுது கைதியாகிவிட்டார் என்பது உண்மை. 1990க்குப் பிறகு பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறும்படி இளைஞர்கள் இவரை வற்புறுத்தி வந்துள்ளனர். ஆனால் பிடிவாதம் கொண்ட இவர், இதை மறுத்துவிடவே, இளைஞர் குழு, ஒட்டுமொத்தமாகவே இவரை அமைப்பிலிருந்தே (மக்கள் யுத்தக் குழு) நீக்குவதாக அறிவித்தது. அதிலிருந்து இவருக்குத் தோல்விதான். இவரது குழு மிகவும் நோஞ்சானாகிவிட்டதாம். அதேநேரத்தில் இவரை எதிர்த்துவந்த கணபதி தலைமையிலான குழு பன்மடங்கு வேகம் பெற்று வளர்ந்து வருகிறதாம். அதுசரி, தான் கைது செய்யப் பட்டது பற்றி சீத்தாராமையா என்ன சொல்கிறார்? "கணபதி குழு வேண்டுமென்றே நான் சரணடைந்ததாக புரளியைப் பரப்பி வருகிறது" மனிதன் இருக்கும்வரையில் குழுவும் இருக்குமோ!


# தமிழகத் தபால்

www.tamilarangam.net

## அடைபடும் அகதிவாழ்க்கை

தமிழ்நாட்டில் உள்ள ஈழ அகதிகள் இப்பொழுது இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளனர். ஈழத்தின் ரத்தவாடை வீசும் தாயகத்திற்குச் செல்வதா? நாள்தோறும் தமிழ்நாடு காவல்துறையாளராலும், ரவுடிகளாலும் அவமானப்படுத்தப் பட்டபோதும், சுயமரியாதையை இழந்து அல்லது சகித்துக்கொண்டு இங்கேயே வாழ்வதா? முடிவெடுப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. தாயகத்திலும், தஞ்சம் புகுந்த இடத்திலும் நடைமுறை எதார்த்தம், அகதிகளின் விருப்பத்திற்கு எதிராகவே உள்ளது. அவமானங்களைச் சகித்துக்கொண்டு, உயிர்பிழைத்தால் போதும் என்று தமிழகத்தில் இருக்கும் ஈழ அகதிகள் இன்று ஒரு பெரும் பிரச்சனையை எதிர்நோக்கும் கட்டாயத்தில் உள்ளனர்.

தமிழ்நாட்டில் வழிப்பறி, கொள்ளை, கொலைகள் அதிகமாகிவிட்டன என்றும், இதில் ஈழ அகதி இளைஞர்களே அதிகம் ஈடுபடுகின்றனர் என்றும் காவல்துறையினர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இதற்குத் தீர்வு என்ன?



இதுகுறித்து பல்வேறு கருத்துகள் கால்கொண்டு நடந்துவருகின்றன. "சீத்தாராமையா கைது ஆகவில்லை; சரணடைந்தார்" என்று ஒரு தகவல். இல்லையில்லை. கணபதி குழுவினர் காட்டிக் கொடுத்துவிட்டனர்; அதனால்

## சு.சமுத்திரத்தின் அடாவடித்தனம்!

இலக்கிய ஆர்வலர்களுக்கு சு.சமுத்திரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. முதல்தர எழுத்தாளராக இருந்த அவர், இன்று நாலாந்தர

எழுத்தாளராக புரோமோசன் பெற்றுள்ளார்?!

போலீஸ் செய்தி என்ற நாலாந்தரப் பத்திரிகையில் ஒரு கேள்வி. "பெண் எழுத்தாளர்களைப் பற்றி.....?" அதற்கு சு.சமுத்திரம் சொன்ன பதில்: "ஒருசில பெண் எழுத்தாளர்களைத் தவிர, மற்ற அனைவருமே தலைப்பிலேயே முந்தானை விரிப்பவர்கள்". இது ஒரு அதிகப்படியான பதில்தான். பெண் எழுத்தாளர்களை சு.சமுத்திரம் கொச்சைப் படுத்துகிறார் என்ற அடிப்படையில், இந்தப் பதில் குறித்து, இந்துமதி, திலகவதி, சிவசங்கரி, ஆண்டாள் பிரியதர்சினி, ஹம்சா தனகோபால் போன்ற பெண் எழுத்தாளர்கள் கருத்துகளைக் கேட்டு, அது ஒரு கட்டுரையாக டி.ராஜேந்தரின் உஷா வார இதழில் வந்தது. பெரும்பாலான பெண் எழுத்தாளர்கள், சு.சமுத்திரத்தின் கருத்தைக் கண்டித்தாலும்கூட "அவர் பெரிய எழுத்தாளர், அவ்வாறு சொல்லியிருக்கக் கூடாது" என்று நழுவினர். ஆனால் திலகவதி, "சில பெண்கள் பழைய செருப்புகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்" என்று கூறியிருந்தார்.

எழுத்தாளனுக்குரிய பண்பாட்டை இழந்து, திலகவதியின் சொந்த வாழ்க்கை பற்றியே ஆவேசமாக எழுதித் தள்ளிவிட்டார்.

சு.சமுத்திரத்தின் இந்த எழுத்து ஆவேசம், உளவியல் சார்ந்த வன்முறையாகும். கிராமங்களில் துடிகொண்டு ஆடும் கருப்பசாமியின் சன்னதம் போன்று, இவரது "எழுத்து வன்முறை" பெண் எழுத்தாளர்களைக் கட்டாயம் பயமுறுத்தி இருக்கும். சு.சமுத்திரத்தின் இந்த நரகல்நடை எழுத்து தடுக்கப்படா விட்டால், தமிழின் காவலர்களாக இவர் போன்றவர்களே மாறிவிடும் (!) அபாயம் உண்டு.

பாதி மரியாதை

நம்பினால் நம்புங்கள். கடைசியில் அந்த அதிசயம் நிகழ்ந்தேவிட்டது! நடிகர் திலகம் சிவாஜிக்கு இந்திய அளவில் தேசிய விருது வழங்கப்படவுள்ளது. நடிப்பில் சில சிகரங்களை எட்டிப் பிடித்துள்ள சிவாஜிக்கு என்றோ தேசிய விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும். என்ன காரணத்தினாலோ வடஇந்திய ஆட்சியாளர்களின் கடைக்கண் பார்வை தமிழ் நடிகனின் திறமையை உதாசீனப் படுத்தியே வந்துள்ளது.

தேசிய திரைப்பட தேர்வுக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த இயக்குனர் பாலு மகேந்திராவின் வற்புறுத்தல், நச்சரிப்பு, வலியுறுத்தல் ஆகியவற்றால், சிவாஜிக்கு சிறப்பு விருது (Special jury award) வழங்கப் பட்டுவிட்டது. அத்துடன் 'தேவர்மகன்' படத்திற்கு நான்கு விருதுகளும் கிடைத்துள்ளன. இதனால் கோடம்பாக்கம் கோலாகலப் பாக்கமாகி விட்டது. இருந்தும் சிவாஜிக்கு தாதா சாகிப் பால்கே விருது வழங்கப் படாதது பலருக்கும் பெரும் குறையாக உள்ளது.

அமெரிக்காக்காரன், சத்யஜித்ரேக்கு ஆஸ்கார் விருது வழங்கிய பிறகுதான் சத்யஜித்ரேக்கு பாரதரத்னா விருதை (கோமா நிலையில் இருந்தவருக்கு) இந்திய அரசியல்வாதிகள் கொடுத்தார்கள். இந்த நிலை இந்தியாவில் எல்லாக் கலைஞர்களுக்கும் ஏற்படும் போலும்! நடிகர் திலகம் உரிய கௌரவத்தைப் பெறுவாரா?


www.tamilarangam.net

www.tamilarangam.net

இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத சு.சமுத்திரம் மீண்டும் போலீஸ் செய்தி இதழில், திலகவதியை மிகவும் தரக்குறைவாக (செக்ஸ் உட்பட) விமர்சனம் செய்துவிட்டார். இதில் அவரது ஆத்திரமும், அகங்காரமும் மட்டுமே மிஞ்சிநின்றது. இது இவ்வாறு இருக்கும்போது கோபிகிருஷ்ணா என்பவர் சு.சமுத்திரத்தின் உளவியல் தன்மை பற்றியும், அவரது கதைகள் பற்றியும் அக்குவேறு ஆணிவேறாக அலசி 16 பக்கத்தில் ஒரு சின்னப் புத்தகத்தையே வெளியிட்டு விட்டார். (இந்தப் புத்தகத் தயாரிப்பில் திலகவதி பின்னணியில் இருந்தார் என்பது இலக்கிய வட்டாரக் கிசுகிசு)

சு.சமுத்திரம் சும்மா இருப்பாரா? நெற்றிக் கண்ணைத் திறந்துவிட்டார். போலீஸ் செய்தியில் திலகவதியின் அட்டைப்படத்தைப் பிரசுரித்து, "முற்போக்கு முகத்திரை கிழிகிறது; திவகவதி வெறியாட்டம்" என்று தலைப்பிட்டு திலகவதியைக் கீழ்த்தரமாக எழுதிவிட்டார். பலருக்குச் செருப்பாகத் தேய்ந்தும், பலரைச் செருப்பாகத் தேய்த்தும் வாழ்ந்துவருபவர் திலகவதி என்று



அதியமான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புள்ள துருவபாலகர்,

உங்களது மாசி93 இதழினை அண்மையில் பார்க்க நேர்ந்தது. அதில் மாலன் என்ற பெயரில் ஒரு துணுக்கு வெளியாகியிருப்பதைக் கண்டேன்.

நான் கடந்த 25வருடங்களாக மாலன் என்ற பெயரில் எழுதிவருகிறேன். தமிழகத்தின் எல்லா முன்னணி இலக்கிய இதழ்களிலும், வெகுஜன சஞ்சிகைகளிலும் எழுதி வந்திருக்கிறேன். சாவி, குமுதம், கணையாழி போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவிலும், திசைகள், இந்தியா டுடே போன்ற முன்னணி இதழ்களில் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிறேன். இப்போது தமிழகத்தின் பெருமைமிக்க நாளிதழ்களில் ஒன்றான தினமணியில் ஆசிரியராக இருக்கிறேன். இதுவரை என்னுடைய புத்தகங்கள் 8 வெளியிடப் பட்டிருக்கின்றன. என்னுடைய சிறுகதைத் தொகுப்புகள் மதுரை, கேரளப் பல்கலைக்கழகங்களில் பாடமாக இருக்கிறது. மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் இதுவரை 3 மாணவர்கள் என்னுடைய படைப்புகளை ஆய்வு செய்திருக்கிறார்கள். மாதந்தோறும் பிபிசியில் தமிழோசை நிகழ்ச்சியில் பங்குபெற்று வருகிறேன்.

# நாற் சந்தி

பெயர் தெரிந்தும், முகம் தெரியாது பலகாலம் யாழில் வாழ்ந்து, தவிர்க்க இயலாது, தொடர்ந்தும் யாழில் வாழ மனம் அவாவியும்கூட யாழ்நகர் புறம்நீங்கித் தற்போது தென்னிலங்கையில் வனவாசம். இன்று முகமிழந்து பெயரழித்து இதை எழுதுகிறேன். ஆனால் இதில் இடம்பெறும் விடயங்கள் உண்மையானவை. எல்லாம் என் மனவெளியில் பதிந்தவை. நிரூபிக்கக்கூடிய ஆதாரங்களெதுவும் தற்போது என் கைவசமில்லை. எதிர்காலத்திலும் கேள்விக்குரியதே.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நேரடிப்பங்கு வகிப்பவர்கள் புலிகளே. இவர்களின் இருப்பானது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானது என்பதை எவரும் மறுக்கவியலாது. அதேநேரம் இவர்கள்மீதான விமர்சனமும் தவிர்க்க இயலாததே. இவர்களின் 'சயனைட் மரணங்கள்' இன்று பெரும் சச்சரவுக்கு உள்ளாகியுள்ளது. இச்சச்சரவு வருங்காலத்தில் தோன்றும் இயக்கங்களுக்கு ஒரு விழிப்பைக் கொடுக்கலாம் என்ற நோக்கில் முதலில் என் கருத்து அமைகிறது.

இந்தியத் தேசியத்தின் தந்தை என வர்ணிக்கப்படும் சுவாமி விவேகானந்தர், விடுதலை ஒன்றை அடைவதற்கு "மகாசமுத்திரத்தின் அடியாழத்துக்குச் சென்று மரணத்தையே நேருக்குநேர் சந்திக்க வேண்டி நேர்ந்தாலும் எந்த வகையிலேனும் தமது நோக்கத்தை நிறைவேற்றி முடிக்கும் மாபெரும் உறுதிப்பாடு கொண்ட உள்ளங்கள் தேவை" என்கிறார். இது மறுக்க முடியாதது. இத்துணிவுற்ற உள்ளம் கொண்டவர்களுக்கு சயனைட் தேவையற்றது. சயனைட் குடிப்பதற்கு வீரம் தேவை என்பவர்களுக்கு விரோதமாகவே விஞ்ஞானிகள் உள்ளனர். "சுயவிரக்க நிலையில் மனம் தளர்வுறும் வேளையில் சுரக்கும்

www.tamilarangam.net

இப்படி நிலைபெற்ற ஒரு பெயரை யாரோ பயன்படுத்தி துணுக்கு ஒன்றை எழுதியிருப்பதும், அதை நீங்கள் வெளியிட்டிருப்பதும் அதிர்ச்சி தருகின்றது.

வாசகர்களுக்கு ஏற்படும் குழப்பத்தை தவிர்க்க இனிவரும் காலங்களில் இதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அந்தத் துணுக்கை எழுதிய அன்பருக்கு நீங்கள் நிலையினை எடுத்துக்கூறி அவரை வேறு பெயரில் எழுதுமாறு கேட்டுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

அன்புடன்,
மாலன்

சுவடுகள் ஆசிரியருக்கு,
நோர்வே.

புலிகள் பற்றிய மதிப்பீட்டில் தனது கருத்தைத் தெரிவித்த கணேசமூர்த்தியின்மேல் தனது விமர்சனத்தைத் தொடுத்திருக்கும் யோசப்பின் கருத்துகளில் உடன்பட முடியாததால் அதன்மேல் எனது விமர்சனத்தைத் தொடர்கிறேன்.

கடந்த காலங்கள், எம்மை ஈழ விடுதலைப் போரிலிருந்து ஒதுக்கியதுடன்

# சயனைட்டு மரணங்கள்

ஒருவகைச் சுரப்பே தற்கொலையைத் தோற்றுவிக்கிறது" என்கின்றனர். "எதிரியிடம் அகப்படின் உங்களுக்கு என்னென்ன நடக்கும் தெரியுமா?" என்ற வாதத்தின் அடிப்படையில், 'மூளைச்சலவை' செய்யப்பட்டே சயனைட் போராளிகளுக்கு வழங்கப்படுகிறது. இதனால் பல அநாவசிய மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இதற்கு ஆனையிறவுப் போர்க்காலச் சம்பவங்கள் பல உதாரணம். கை,கால் அங்கவீனமுற்ற பலர் "இனி வாழ்வது இயலாது" என விரக்தியுற்று சயனைட் அருந்தி இறந்துபோயினர். இதனை அறிந்த தலைமை புதியதோர் உத்தரவைப் பிறப்பித்தது. "போரின்போது, காப்பாற்றக்கூடிய சூழ்நிலையில் அங்கவீனம் அடைபவர்கள் சயனைட் அருந்தி மரணிப்பதைத் தடுக்க அருகிலுள்ளவர் அங்கவீனம் அடைந்தவரின் கழுத்திலுள்ள சயனைட்டை அறுத்தெடுக்க வேண்டும். ஏனெனில் அங்கவீனமுற்றோரைத் தற்கொலைப் படையாகப் பாவிக்கலாம்" என்பதே அது. இன்னொரு நிகழ்வு. ஷெல்வீச்சால் மரணமடைந்த மேலதிகாரி ஒருவரின் பாதுகாவலர் ஒருவர் அவ்வதிகாரியின் மரணத்துக்குத் தான் விசாரணைக்குட்பட நேரிடும்; தண்டனையடைய நேரிடும் என்ற அச்சத்தில் சயனைட் அருந்தி மரணித்தார்.

சயனைட் பற்றிய, புலிகளின் தலைமை, மேலதிகாரிகளின் நிலைமை என்ன? புலேந்திரன், குமரப்பா முதலியவர்களின் மரணம் தியாகமல்ல. அவை இயக்கத்தின் தலைமைப் போட்டியைத் தவிர்க்கவும், சுயலாபத்திற்கும் விளம்பரத்திற்கும் மேற்கொள்ளப் பட்டவையே. அல்லாவிடில் அவர்களின் மரணத்திற்குப் பொறுப்பெனக் கூறப்பட்ட இலங்கை அரசுடன் புலிகளால் எவ்வாறு கூடிக்குலாவ முடிந்தது? மேலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்துக் கையெழுத்திட்ட புலிகளின் தலைவர் பிரபாகரன், தான் இந்திய அரசின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே கையெழுத்திட்டதாகக் கூறினார். ஏன் அவர் அந்நிலையில் சயனைட் குடிக்கவில்லை? இதைப்பற்றிக் கருத்துத் தெரிவித்த

www.tamilarangam.net

பல படிப்பனைகளையும், கற்பிதங்களையும் விட்டுச் சென்றுள்ள இந்த இடைவெளியில் கட்டுரையாளர் புலிகளை எந்த ஆய்வுக்கும் உட்படுத்தாமல் எழுந்தவாரியாகப் புகழாரம் சூட்டிச் செல்வதுடன், குறிப்பாக இன்றைய காலத்தின் தேவையை மனதில் கொண்டு மூன்றாம்கட்டப் பாதையைத் தேடும்முகமாக வெளிவரும் நடுநிலை ஏடுகளைப் புலிகளுக்கு ஆதரவாக எழுதக் கோருவது வேடிக்கையாக உள்ளது.

ஈழவிடுதலைப் போராட்டம் பரந்துபட்ட சக்திகளின் கைகளிலிருந்து ஒதுங்கி இன்று புலிகளின் கைகளில் சென்றுள்ளது. இந்தப் போக்கு தன்னிச்சையாக நிகழ்ந்த ஒன்றல்ல. மாறாக பிறசக்திகள் புலிகளின் அதிகார வெறியினால் அழிக்கப் பட்டார்கள் என்பதே உண்மை. எந்தக் காரணங்களை, எந்த நியாயங்களைக் கற்பிதம் செய்து பிற இயக்கங்களைக் கொன்றொழித்தார்களோ அதே தவறைப் புலிகளும் செய்தார்கள்; செய்கிறார்கள் என்ற இந்த உண்மை இன்று மக்கள் மத்தியில் கசியத் தொடங்கியுள்ளது. மொஸாட், றோ போன்ற பிற ஆதிக்க சக்திகளிடம் கையேந்திய உண்மையே அது.

இன்று இலங்கை இந்திய அரசுகளின் கால்களில் வீழ்ந்து கிடக்கும் இயக்கங்களைவிட ஈழத்தில் எந்தவொரு அமைப்பையோ முற்போக்கு சக்திகளையோ புலி அபிமானி ஒருவர் "உனக்கு ராஜதந்திரத்தைப் பற்றி ஏதும் தெரியுமா? தலைவர் இறந்தால் இயக்கம் என்னாவது?" என்றார். "இயக்கம் பிரபாகரனது சொந்த இயக்கமா? அவ்வாறாயின் தலைவர் இறந்தபின் இயக்கத்தின், இயக்கத்தில் உள்ளவர்களின் கதி என்ன?" என வினவினேன். அவர் பதில் கூறவில்லை. ஆனால் என்னை ஒரு தேசத்துரோகி போலப் பார்த்தார். எனவே சயனைட் அருந்துவது வீரமா இல்லையா என்பதைவிட அவசியமானதா இல்லையா என்பதே முக்கியமானதாகும். எனது கருத்து தேவையற்றதென்பதுதான். "மகத்துவங்கள் ஆயிரம் நிறைந்த மரணத்தின் மேலும் வாழ்வே வலியது" என்கிறார் வ.ஐ.ச.ஜெயபாலன். சிந்தித்துப் பாருங்கள்.

இரண்டாவது, புலித்தலைமையின் சுயம் எவ்வகையானது? 1984களில் இந்தியாவில் வெளிவரும் **Sunday** (ஆங்கிலம்) சஞ்சிகைக்கு **'If Jeyawarthana was a true buddhist, I would not carrying a gun'** என்ற தலைப்பில் வழங்கிய பேட்டியில், எமக்குத் துணைசெய்யவென இந்திய ராணுவம் இலங்கைக்கு வரின், கடைசி இந்திய வீரன் எனது மண்ணில் இருந்து வெளியேறும்வரையிலும் அவனுக்கெதிராகவே எனது துப்பாக்கி வெடிக்கும்" எனக் கூறியிருந்தார். ஆனால் நடந்தது என்ன? அவர், தான் கூறியதைச் செய்தார் என்பது உண்மை எனினும், இந்திய ராணுவம் இலங்கைக்குள் வருவதையும் ஆதரித்தார் என்பதுவும் உண்மை. கோட்டையில் இந்திய இராணுவத்திற்கு யாழ்ப்பாணவாசிகள் **lux, icecream** என்பவற்றை வாங்கிக் கொடுத்து வரவேற்பதைக் கவலையுடன் பார்த்துநின்ற என்னிடம், ஒரு புலி இயக்கப் பிரமுகர் கூறினார் "இப்ப உங்களுக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால் நாளை உங்கள் அக்காவினதோ, தங்கச்சியினதோ வயிற்றுக்குள்ளே 'சிங்' (சீக்கியர்) வளரும்போதுதான் நிலைமை விளங்கும்" என. தமிழ் மக்களைப் புலித்தலைமை காட்டிக்கொடுத்தமைக்கு இது ஒரு சான்று. மேல்விவரங்களை அக்காலத்தில் இந்தியாவிலிருந்து வெளியான 'புதிய ஜனநாயகம்', 'வீசியெறிந்த காசிற்கு விலைபோன விடுதலைப் புலிகள்' என்ற தலைப்பில் வெளியிட்ட படங்களுடனான கட்டுரை தருகிறது.

மேலும் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காலத்தில், தன்னைப் போன்ற, சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவெனப் புறப்பட்டிருந்த ஜேவிபி இயக்கத்தை அரசு அழிப்பது சரியெனக்கூறி தனது அரச விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது. தனது தற்கொலைப் போராளி ஒருவனைக் கொழும்பு அனுப்பி ரஞ்சன் விஜேரத்னாவைக் கொலை செய்வித்த இயக்கம் அதைப்பற்றிப் பேச மறுத்தது.

புலிகள் விட்டுவைக்கவில்லை, விட்டுவைக்கப் போவதுமில்லை.

இத்தனைக்கும் காரணம் ஈழமக்கள்மீது கொண்ட நேசிப்பா? இல்லை. வெறி, அதிகார வெறி. இதில் கண்மண் தெரியாமல் எமது சகோதரர்களைத் துவக்கிற்கு முன்னும், சைனைட் குப்பிக்கும் பலியிடுகிறார்கள். இந்தப் பலியீடுகள் எல்லாம் ஈழவிடுதலையை பெற்றுத் தருகிறதோ இல்லையோ, புலிகளின் அமைப்பைக் காக்க நன்றாகவே உதவுகிறது.

புலிகளானாலும் சரி அல்லது ஈழவிடுதலைக்கு துரோகம் இழைக்கின்ற எந்தவோர் அமைப்பானாலும் சரி அதன் தவறுகளைச் சுட்டிக்காட்டி அதற்கெதிராகப் போராடவேண்டும். அதைவிடுத்து அவர்களை விமர்சிப்பது ஈழவிடுதலையைப் பின்னடையச் செய்யும் என்று கருதி, ஒத்துழைப்புக் கொடுக்கும் பட்சத்தில் ஒட்டுமொத்தமான மக்களையே அழிவுக்கு இட்டுச் செல்லும். இந்த நிகழ்ச்சிப் போக்கைக் கவனத்தில் எடுத்து ஈழவிடுதலையை வென்றெடுக்க முனைவோம்.

கி. ஆனந்தன்,
சூரிச், சுவிற்சர்லாந்து.

ஆனால் அரசு செய்த கொப்பேகடுவ உட்பட்டோரின் கொலையைத் தன் தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டது. இதனால் தெற்கிலும் அரச படைகளுக்குள்ளும் வெடித்திருக்கக் கூடிய கலகத்தைத் தடுத்து அரசிற்கு விசுவாசமாக நடந்துகொண்டது.. இதனால் லலி கொப்பேகடுவ பிரச்சனையைத் தொடக்கியபோதில் மீண்டும் புலிகளின் தலைமை தனது விசுவாசத்தைக் காட்டிக்கொண்டது. இதுதான் புலிகளின் ராஜதந்திரமோ தெரியவில்லை.

....................

1991இல் அரசுடன் பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனைகளில் ஒன்றாக, வல்வெட்டித்துறையில் அரசபடைகளின் தாக்குதல்களால் சேதமுற்ற அனைத்துக் கட்டிடங்களையும் அரசு கட்டித்தர வேண்டும் என மறைந்த கிட்டு கோரிக்கை விடுத்திருந்தார். இதனை விடுதலைப்புலிகளின் தலைமை மறுக்கவில்லை. இதிலிருந்து விடுதலைப் புலிகளின் நோக்கம் என்னவென்பது வெளிப்படையாகிறது.

......................

எழுதுவதானால் இதேபோல் இன்னும் தொடரலாம். ஆனால் இவ்வாறான விடயங்கள் எமக்கு ஒரு விடயத்தைத் தெளிவாக்கியிருக்க வேண்டும். அது என்னவெனில், இப்போதுள்ள இயக்கத் தலைமையோ கொள்கையோ எங்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை என்பதுதான். எனவே விடுதலையடைய இதுகாலவரையிலான தமிழீழ வரலாற்றால் புடம்போட்டுப் பரிணமிக்கும் இயக்கம் ஒன்றாலேயே முடியும். இவ்வியக்கம் புலிகள் மத்தியில் இருந்தும் தோன்றலாம். எனவே அக்கறையுள்ள அனைவரும் இவ்வாறான இயக்கம் தோன்றுவதற்கு வழிசமைத்தலே தற்போது முக்கியமாகும்.

தேரோட்டி,
இலங்கை.
05.04.93


## சயனைட்டு மரணங்கள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காணாமற் போனவர் பற்றிய அறிவிப்புகள்

க.ஆதவன்



1.
அவள் சிரிக்கும்பொழுது
சிறு குழிகள் கன்னத்தில் விழும்.
பற்கள் பெரியவை எனச் சொல்ல முடியாது.
கண்கள் எதையாவது பேசாமல் இருந்ததில்லை.
குறும்பு செய்யும் உதடுகள்.
தெருக்களிலோ.... விழாக்களிலோ... வெளிச்சத்திலோ......
பெரிதாக வெளியே வராள்.
இடுக்குகள்... நீக்கல்கள்..... மௌனவெளிகள்......
இங்கே அவளைக் காணலாம்.
நான் அவளைத் தொலைத்துவிட்டேன்.
அல்லது –
அவள் என்னைத் தொலைத்தாளோ தெரியவில்லை.
ஆனால்........
தொலைந்துவிட்டோம் என்பது மட்டும் உண்மை.
உலகைப் புரட்டும் புரட்சியாளர்களே
ஏதாவது செய்யுங்களேன் இதற்கு.
பி.கு. ஆக
இன்னும் ஒரு விஷயம்
– லெங்கைச்சி.

விடுப்பும் விண்ணாணமுமாய்...... வலியவலம்
வரும் என்றும் முப்பது வயதுடைய
மார்க்கண்டேயகி பாக்கியம் அக்கா எங்கே?
பி.கு. ஆக இன்னும் ஒரு விஷயம்
அவள் இறந்திருக்க முடியாது.
அவளுக்கு என்றும் முப்பது வயது.
*****

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2.

மூக்கில் சளிவழியும்.
பொத்தான் இல்லாத காற்சட்டை
இடுப்புதனில் நழுவ
இறுக்கி ஒரு முடிச்சு.
மேலெங்கும் புழுதி.
தென்னை மட்டையில்
'காரோ'ன்று செய்து
கலட்டி யெல்லாம் சுற்றி வருவான்.
கண்ட புதினம் விண்டுரைப்பான்.
தெத்திப் பல்லன், - ஆனால்
எத்தன் இல்லை, நல்லன்.
கிடுகு வேலிகளில் பொட்டுப் பிரிப்பான்.
கள்ளமாய் காணி வேலி பாய்ந்து
மாங்காய் தேங்காய் புடுங்குதலில் வல்லன்.
நண்பர்க்கும் நண்ணினார்க்கும் நல்லன்.
பி.கு. ஆக இன்னும் ஒரு விஷயம் -
இப்போ அவன் வளர்ந்திருக்கக்கூடும்,
உண்மைக் 'கார்' ஒன்றில்
'காணி' 'வேலி' கள்ளமாய் பாயக்கூடும்.
கண்டால் சொல்லுங்கள்
விசாரித்தேன் என்று.

****

3.

தாலியை மட்டும் வெளியே தெரியவிட்டு
கூந்தலைக் கொஞ்சம் குழும்பல் கொண்டையாக்கி
தனக்கென ஒரு 'ஸ்ரைலை' அமைத்து
தெருவெல்லாம் - வீடெல்லாம்

4.

கையிற் பிரம்பு
நெற்றியில் நீறு.
வேட்டி - நாஷனல்.
சைக்கிளில் நிமிர்ந்த இருப்பு.
நாவில் தமிழ்.
கம்பனையும் இளங்கோவையும்
கம்பியூற்றாயுக மாணவர்க்கு
சலிப்பின்றிக் கடமையாய்
திணித்ததனால் பல 'பண்டிதப் பட்டங்கள்'
குட்டி மாணவ குலம் மகிழ்வுற்ற
தமிழ் வாத்திமாரைக் கண்டீரோ......?

****

5.


கால மாற்றத்தின் பரிமாணங்கள்
இவையென அமைதி கொள்ளும்
பக்குவ நெஞ்சும்
கொஞ்சமாய்த் தொலைகிறதையா.
மிஞ்சுவதெல்லாம் விரக்தியென
அஞ்சுதல்தான் வாழ்விங்கே.
எங்கே என் போராட்ட நெஞ்சு?
பி.கு. ஆக
அதையும் கண்டால்
அறியத்தருக உடனே!

22.05.1992

www.tamilarangam.net

# தென்னாபிரிக்காவை உலுக்கிய ஒரு மரணம்

சாந்தன்




சில ஏது மரணங்கள் அசாதாரணமானவை. அவை உலகுக்கு விட்டுச் செல்லும் செய்திகளும், அனுபவங்களும் வரலாற்றின் கீற்றாக நிலைத்து நிற்பவை. அண்மையில் (ஏப்ரல் 10), தென்னாபிரிக்காவில் நிகழ்ந்த கிறிஸ் ஹனியின் படுகொலையும் அவ்வாறான ஒன்று. ஆபிரிக்காவின் தேசிய விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு மரணமாக இந்தப் படுகொலை நிகழ்ந்திருக்கிறது.

தென்னாபிரிக்கக் கொம்யூனிஸ்ற் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த ஹனி, ஆபிரிக்கத் தேசிய கொங்கிரசின் படையணிப் பிரிவின் (Umkhonto we Sizwe) முன்னாள் தளபதியும் ஆவார்.

தனது இருபதாவது வயதில், 1962ஆம் ஆண்டு ஆபிரிக்கத் தேசிய கொங்கிரசின் படையணிகளில் தன்னை இணைத்தார் ஹனி. மறுவருடமே கைதாகி, வெளிவந்து தலைமறைவாகியதுடன் ஹனியின் வாழ்வு முற்றிலும் அரசியலுக்காக என்றாகியது. வெளிநாட்டில் தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்ட இவர், றொடீசியாவின் விடுதலைப் போரில் நேரடிப் பங்கெடுத்ததுடன், தென்னாபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த பல ராணுவத் தாக்குதல்களை வெளிநாடுகளில் இருந்தே நெறிப்படுத்தினார்.

1982இல் படையணியின் அரசியற் பொறுப்பாளராகிய ஹனி, பல நெருக்கடியான நிலைகளைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது தென்னாபிரிக்காவின் கெரில்லாக்கள் பல நாடுகளிலும் பரந்திருந்தனர். 1980இல் அமெரிக்காவில் றீகன் பதவியேற்றபோது, பல ஆபிரிக்க நாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. மொஸாம்பிக், தென்னாபிரிக்காவுடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பந்தம் செய்ய (1984) நிர்ப்பந்திக்கப் பட்டது. இந்த ஒப்பந்தம் அங்கிருந்து ஆபிரிக்கத் தேசிய கொங்கிரஸ் போராளிகள் வெளியேறக் காரணமாயிற்று.

இவ்வாறான நெருக்கடிகளில் தளராதுழைத்த ஹனி, 1986இல் படையணிகளுக்குத் தளபதியாக நியமிக்கப் பட்டார். றீகனின் மற்றொரு நடவடிக்கையால், அங்கோலாவில் ஹனியின் படையணிகள் மிகுந்த நெருக்கடியைச் சந்தித்தன. அங்கோலாவின் வலதுசாரி கெரில்லாக்களான 'யுனிற்றா'வுடன் தென்னாபிரிக்க அரச படைகள் பல சதிவேலைகளை மேற்கொண்டிருந்தன. பெருமளவு பிரதேசங்கள் யுனிற்றாவினால் கண்ணிகள் புதைக்கப்பட்ட பிரதேசமாகின. ஆபிரிக்கத் தேசிய கொங்கிரஸின் படையணிகள் அங்கோலாவில் சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப் பட்டன.

அங்கோலாவில் ஆபிரிக்கத் தேசிய கொங்கிரஸின் படையணிகள் எதிர்கொண்ட பல சிக்கல்களில், அப்போது அங்கோலாவில் நிலைகொண்டிருந்த கியூபப் படைகள் பேருதவி புரிந்தன. யுனிற்றாவும், தென்னாபிரிக்க அரசுப் படைகளும் நிகழ்த்தியிருக்கக் கூடிய பல தாக்குதல்களில் கியூப அணிகள் வீரத்துடன் போரிட்டன. அங்கிருந்த கியூப மருத்துவர்கள், ஆசிரியர்கள் போன்றோர் புரிந்த உதவிகள் மறக்க முடியாதவை என ஹனி குறிப்பிடுவார். கியூபாவின் புரட்சி பற்றியும், கியூப அதிபர் ஃபிடல் காஸ்ற்ரோ பற்றியும் ஹனி பெருமதிப்புக் கொண்டிருந்தார். கியூபாவுக்கு அவர் அண்மையில் விஜயம் செய்தபோது, தற்போது அமெரிக்காவினால் அநியாயமாக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளையும் தாண்டித், தனது தனித்துவத்தை இழக்காது கியூபா தலைநிமிர்வதாகக் கிறிஸ் ஹனி கூறியிருந்தார்.

கிறிஸ் ஹனி, தென்னாபிரிக்காவில் பெரும்பான்மைக் கறுப்பின மக்களிடையே

## முகப்படல்

*முக்கில் நுனிவியர்க்க*
*மூலையில் கிடக்கும்*
*மாதவிலக்குப் பெண்*
*பேனா.*
*சரி சரி*
*இனி என்ன*
*வயசுக்கு வந்துவிட்டாய்தானே?*

*ஒற்றைப் பின்னலில்*
*கால்நனைக்கும் பூக்கூடை*
*தெரு சுமப்பாள்*
*ஒருத்தி.*

*அரும்பிலே பட்ட புழுப்போல்*
*காதலுக்கு*
*ஒத்தடம் கொடுப்பாள்*
*இன்னொருத்தி.*
*எவளோடு உனக்கு*
*வார்த்தைப்பாடு.*
*ஏய் பெண்ணே!*
*தெருப்பிணத்தில்*
*ஏது உனக்குப் பிடிக்கும்*
*உடன்கட்டை ஏற.*
*விரிகடல் நடந்த*
*மோசேயின் கைத்தடிபோல*
*உனைப் பார்க்க*
*எனக்காசை*
*முகம் காட்டு.*

**வயவைக்குமரன்**

www.tamilarangam.net


# மௌனம் 1

கலை இலக்கிய இதழ்

மே, யூன், யூலை'93
வள்ளுவர் ஆண்டு 2024

தொகுப்பாளர்:
கி.பி.அரவிந்தன்

இணை தொகுப்பாளர்:
க.முகுந்தன்

கணனி பதிவு:
பொ.இரவிச்சந்திரன்

வடிவமைப்பு:
ஆத்மன் & அநாமிகன்

வெளியீடு:
A.F.T.C. சார்பாக பு.விக்னேஸ்வரன்

- நண்பர்களுக்கு மட்டும் -

✉
MOUNAM
6, Square du Roule
92200 NEUILLY S/SEINE
FRANCE


ஒரு நல்ல, புகழ்மிக்க தலைவராக விளங்கினார். தானே ஒரு போராளியாகவும், படைத் தளபதியாகவும் இருந்தபோதிலும் ஹனி அமைதியான ஒரு தீர்வை மிகவும் நம்பினார், வலியுறுத்தினார். பேச்சுவார்த்தைக்கு இணங்குவது, ஆபிரிக்கத் தேசிய கொங்கிரஸின் வலிமையையும், அமைதிக்கான அதன் நல்லெண்ணத்தையும் காட்டுவதுடன், சர்வதேச ரீதியில் ஆதரவையும் பெற்றுத் தரும் என்பது ஒரு பலமான உண்மை. அதேவேளை பெரும்பான்மையான மக்களது அனைத்து உரிமைகளும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் மீளளிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமிருக்க முடியாது.

ஹனியின் படுகொலை மூலம் வலதுசாரித் தீவிரவாதிகள் அமைதிக்கான தமது எதிர்ப்பை, எச்சரிக்கையை அறிவித்துள்ளனர். இந்தப் படுகொலையைப் புரிந்தவன் எனச் சொல்லப்படும் கொலையாளி போலந்திலிருந்து பன்னிரு வருடங்களுக்கு முன் தென்னாபிரிக்கா வந்ததாகச் சொல்லப் படுகிறது. கொலையாளியின் பின்னணியில் இருந்ததாகச் சொல்லப்படும் மேலும் சிலரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

படுகொலையால் அதிர்ச்சியுற்ற கறுப்பின மக்களினது எழுச்சியையும், வன்முறைகளையும் கட்டுப்படுத்த, ஒரு அரசுத் தலைவர் போல நெல்சன் மண்டேலா தொலைக்காட்சியில் தோன்றி உரை நிகழ்த்த நேரிட்டது. இது ஹனிமீது மக்கள் கொண்டிருந்த பேரபிமானத்தையே காட்டுகிறது. ஹனியின் வெற்றிடத்தை இலகுவில் யாரும் நிரப்பிவிட முடியாது. ஆனால் வரலாறு வெற்றிடங்களையும் விடுவதில்லை.


இந்த மரணம், தற்போது நிகழ்ந்துவரும் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான பேச்சுகளைத் துரிதமாக்க சகல தரப்பினரையும் நிர்ப்பந்திக்கிறது. இந்தப் படுகொலை தற்போது சிறுபான்மை அரசுக்கும், பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நிகழும் பேச்சுகளைப் பெரிதும் பாதித்திருப்பதாகத் தெரியவில்லை. எனினும் பேச்சுகளைக் குழப்பும் முயற்சியில் மீண்டும் தீவிரவாதிகள் முயற்சிப்பர் எனக் கருத இடமுண்டு. இவ்வாறான முயற்சிகளை உரியவிதத்தில் நிறுத்தத் தென்னாபிரிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்காவிடில், கிறிஸ் ஹனியினதும் அமைதிவழியில் தீர்வு ஏற்படும் என நம்பிய எல்லோரதும் முயற்சிகள் வீணாக்கப்பட்டு, மீண்டும் இரத்தக் களரி ஏற்பட நேரிடலாம். ஆனால் அப்போதும், தீர்வை - தென்னாபிரிக்காவின் பெரும்பான்மை மக்கள் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள் மீட்கப் படுவதை - ஒரு சுதந்திர நாடாகத் தென்னாபிரிக்கா மிளிர்வதை, யாரும் தடுத்துவிட முடியாது.●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ்.ஜெயக்கொடி

# வெளவால்கள்



மனிதர்கள் மகிழும் மனித மரணங்களும் உண்டு. கேள்விப்பட்டிருக்கிறேன். இருக்கலாம். இதில் வியப்பதற்கு எதுவுமில்லை. ஆனால் இங்கேயோர் எட்டுவயது மனிதனின் மரணத்தைக் கண்டு அயலட்டங்கள் மகிழ்கின்றன. அல்லது அவனது மரணம் இந்த அயலட்ட மனிதர்களுக்குக் கவலையையோ, கண்ணீரையோ வரவழைக்கவில்லை. எதிரியின் அழிவில் மகிழ்வதைப்போல், வெறுப்புக் குரியோரின் சாவில் திருப்திப் படுவதைப்போல் இந்தச் சின்னஞ்சிறு மனிதனின் மரணமும் இவர்களுக்கு விடுப்புக்குரியதாகி விட்டதா....? ஆனால் அவனின் மறைவை ஜீரணிக்கவோ, தாங்கிக் கொள்ளவோ என்னால் முடியவில்லை. அவனின் பெற்றோருக்கும் மீளாத்துயர் என்பதை நான் அறிவேன்.

"லோகுப்பயல் செத்துப் போட்டுதாம்"

"எந்த லோகு"

"உவன்தான் சிவானந்தன்ர பயல்"

"இப்பதான் சிவானந்தனுக்கும் பெண்டிலுக்கும் விடிவு வந்திருக்கு" (அப்பப்பா, அயலவர் வாழ்வு விடிவதில் இவர்களுக்கு என்னே கரிசனை!)

"அந்தப் பயலோட அதுகள் ரெண்டும் நல்லாத்தான் கஷ்டப்பட்டுப் போச்சுதுகள்"

"வேறையென்ன.... அது பிறந்ததிலையிருந்து இண்டைக்கு எட்டு வருசமா மூளை வளர்ச்சியில்லாம, கைகால்களும் சும்பிப்போய் நடக்கவும் ஏலாம அரைஞ்சுகொண்டு கிடந்தத அங்க இங்கயெண்டு எத்தினை இடங்களில கொண்டுதிரிஞ்சு காசக் கரியாக்கிச்சுதுகள். ஒரு பிரயோசனமுமில்லை"

"ஓமோம் அது எப்பவோ போய்ச் சேர்ந்திருக்க வேண்டியதுதான். அதுகளின்ர பிரயாசையால எட்டு வருசமாக் கிடந்து இழுபட்டிருக்கு..."

"எவ்வளவச் செலவழிச்சென்ன? முற்பிறப்பில செய்த கறுமம் சும்மா விடுமே...?" (முற்பிறப்பில் யார்யார் என்னென்ன கர்ம தர்மம் செய்தார்கள் என்ற கணக்கெடுப்பிற்காக இவர்கள்தான் நியமிக்கப் பட்டிருந்தார்கள் போலும்)

"அதுசரி அந்தப்பயல் ஓரளவு கதைக்குமாமே?"

"கதைச்சு என்னடியப்பா பிரயோசனம்? ஆம்பிளப் பிள்ளயப் பெத்தமெண்ட பேர்தான், ஆனால் மூளையும் வளராமல் இன்னுங் குறமாதப்பிள்ள போல, தேரக் குஞ்சு மாதிரியிருந்து என்ன "அருளம்பலத்தாற்ர செய்வினையெண்டும் சிலபேர் கதைக்கினமேயக்கா?"

(இவர்கள்தாமே அந்தச் 'சிலபேர்', அந்தச் 'சிலபேர்' தாமே இவர்கள். இதில் நாவுக்குச் சுவையான கதைகளை மற்றவர் வாயிலிருந்து வெளியே இழுப்பதற்காக, 'சிலபேர்' என்ற

www.tamilarangam.net

தூண்டி நல்லாவே உதவுகிறது)

"ஆர் கண்டது? சிவானந்தன் சாதிமாறி உந்தப் பொடிச்சியக் கட்டினது அருளம்பலத்தாருக்குப் பிடிக்கேல்லத்தான். மகனத் தடுத்துப் பாத்தார். சரிவரேல்ல, உவன் பெடியன் கேக்கிறதாயில்லை, என்ர சவத்திலயும் முளிக்காத எண்டு கைகழுவி விட்டுட்டார். சூனியக்கார ஆரோக்கியசாமியோட அருளம்பலம் நல்ல பழக்கம்தானே? செய்தாலும் செய்திருப்பார்"

(எலும்பில்லா நாக்கு கண்டபடி சுழலும் என்பார் இதைத்தானோ?)

"பெத்த பிள்ளையெண்டும் பாராமல் அந்தாள் அப்பிடிச் செய்திருக்குமே?"

"உவளாரடி...?! உந்தக் காலத்தில எங்கயிருக்கடி தேப்பன் பிள்ளப் பாசம்? அருளம்பலம் நல்ல கொழுத்த சீதனத்தோட தன்ர சாதியில் கட்டிக் குடுக்கலாமெண்டு பெரிய பெரிய மனக்கோட்டையெல்லாம் கட்டி வச்சிருந்தவர்; பெடியன் என்னடாண்டால் சீதனம் கீதனம் இல்லாமல் செல்லான்ர பெடிச்சிய இழுத்துக் கொண்டு ஓடிற்றான். அதுகும் செல்லான் என்ன சாதியெண்டு தெரியுந்தானே? அருளம்பலம் சரியான சாதித் திமிர் பிடிச்ச மனுசன் சும்மா விடுமே?"

"அதுக்கு ஏனக்கா அந்தப் பச்சக் குழந்தக்குச் செய்யவேணும்?"

"அந்தாள் காரணத்தோடதான். தன்ர வம்சம் கலப்புச் சாதியா இருக்கக் கூடாது எண்டுதான். தெரியாமத்தான் கேக்கிறன் இந்த லோகுப்பயல் என்ன சாதியெண்டு நீ சொல்லு பாப்பம்?"

இப்படி ஊராரின் அழுக்கு நிறைந்த கதைகள் தண்ணீர்க் கிணற்றடி, மிளகாய்த் தோட்டம், வாசிகசாலை, கோயில் மரத்தடி, பாடசாலை மண்டபம் என்று, தொற்றுக்கிருமிகள் நிறைந்த நோய்போல, நோய்க்கிருமிகள் நிறைந்த தொற்றுநோய் போல ஊர் பூராவும் பரவி, என் காதுகளையும் தொட்டுத் துக்கம் கொள்ளச் செய்தன.


ஓர் மரணத்தின் நிமித்தம் துயர்கொள்ளத் திராணியற்ற இவர்கள் அந்த மரணநிகழ்வைத் தம்வசமாக்கி வாய்களுக்கு ருசியாய் கதைகட்டப் பழக்கப்பட்டு விட்டார்கள். ஈனப்பிறவிகளென வர்ணிக்கப் படுவது, இந்தப் பிறர்துயரில் இன்பம் தேடும் மனிதர்களைத்தானோ தெரியவில்லை.

"அண்ணா.... உங்கர வீர்ர மாருளம்பலம் நிக்குராமே? எனக்கும் மாருளம்பலம் ஏருவியா.....?"

எனது வீட்டிலிருந்து மூன்று வீடுகள் தள்ளித்தான் லோகுவின் வீடும். இடையிடையே அவன் வீட்டுத் தெருவால் வரும்போது அவனையும் சென்று பார்த்துவிட்டுத்தான் வருவேன். அவனைச் சந்திக்கப் போகும்போதெல்லாம் அனேகமாக ஏதாவது தின்பண்டங்கள் அவனுக்காக வாங்கிச் செல்வேன், அல்லது வீட்டில் செய்யும் பலகாரங்களில் அவனுக்காகவும் கொண்டு செல்வேன். என் தாயார் அல்லது அக்காள் வீட்டில் விசேடமாக ஏதாவது பலகாரம் செய்தால் "உதில லோகுவுக்கும் எடுத்து வச்சிருக்கு சத்து, இத எட்டிக் குடுத்திற்று வாடா" என்று மறக்காமல் என்னிடம் கொடுப்பார்கள். அவன் என்னில் நேசமாய் இருப்பதைப் போல் நானும் அவனில் நேசம் வளர்த்தேன்.

"அண்ணாவுக்குப் பரினஞ்சு முற்ரு, எனக்குப் பரினஞ்சு முற்ரு....." என்று, நான் அவனுக்காகக் கொண்டு செல்லும் மாதுளம்பழத்தை உடைத்து தனது சூம்பிய விரல்களால் எண்ணிப் பிரித்து, தன் சின்னஞ்சிறு கைகளால் என் பங்கை ஊட்டிவிடுவான். அதேபோல் நானும் அவனுக்கு ஊட்டவேண்டும் என்பது அவனது விருப்பம். மூளை வளர்ச்சி குறைந்தவன் என்று ஊரார் புளுகுவதை என்னால் ஜீரணிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ முடிவதில்லை. லோகு

www.tamilarangam.net



மிகவும் புத்திசாலி. சாதாரண மனிதருக்கு இருக்கும் அறிவை, சிந்தனையைவிட அவனிடமோர் அசாதாரணத் தன்மை கொண்ட புத்திக்கூர்மையையும், சிந்தனைப் பாங்கையும் நான் பல தடவைகள் நேரிடையாகக் கண்டு பிரமித்திருக்கிறேன்.

முற்றத்தில் இரண்டு குருவிகள், புழுதிக்குள் சிந்திக் கிடக்கும் அரிசிக்குறுணிகளைப் பொறுக்கி வாயிற் போட்டபடி தத்தித் தத்தித் திரிந்தன. வாயிற்படியில் அமர்ந்திருந்தபடி நீண்ட நேரமாய்த்தான் அவன் அவைகளிரண்டையும் கண்ணுற்றிருக்க வேண்டும். படலையைத் திறந்து உள்ளே சென்ற என்னை "உஸ் சற்றம் போராமல் இரில வந்திரு" என்று மெதுவாகக் கூறிச் சைகை காட்டினான். அவனருகிற் சென்று இருந்தேன். தன் மெலிந்த விரல்களால் குருவிகள் இரண்டையும் சுட்டிக்காட்டி கண்களைச் சிமிட்டிச் சிரித்தான். மீண்டும் குருவிகள் இரண்டையும் சற்றுக் கூர்ந்து கவனித்துவிட்டு "என்னைப்போல இருகலுக்கும் சப்பாணிமகன் இருக்குருபோல. சப்பாணிமகன கூற்றில ரணிய விற்ருப்போற்ரு இருகலிரண்டும் ராப்பாரு ரேர வந்திருக்கினம்" இந்த வார்த்தைகளில் அவனது சின்ன இதயத்துள் பாரமாய்க் கனக்கும் துயரத்தின் நெடில் வீசியது. என் சிந்தனையைத் துக்கம் நெருடி நெரித்தது. பலத்த சத்தமாய் ஓ....வென்று கதறவேண்டும் போல இருந்தது. என்னையும் மீறிக் கண்கள் பனித்தன. இறுகத் தழுவி அவன் உச்சியை முகர்ந்தேன். என் இறுக்கமான அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு "ஏனண்ணா நீ அலுகிராய்.... என்னால நரக்க ஏலாதென்ருதானே....?" என்ற கேள்வியோடு எனை நோக்கும் அவனது பார்வையில் "என்னில் அனுதாபப் படுவதை விடுத்து, நீ என்னில் அன்பு செலுத்துவதையே விரும்புகிறேன்" என்பதான வேண்டுதல் தெரிந்தது.

லோகு இறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக படுத்த படுக்கையாய்க் கிடந்த அவனருகில் அமர்ந்திருந்த எனது கரங்களைப் பற்றிப் பிடித்துப் பலதடவைகள் முத்தமிட்டான். தன் நெஞ்சோடு என்

www.tamilarangam.net

●

முதற் பக்கம் வரவேண்டும்
என் கவிதை
முக்கியமாய்ப் படம் வேண்டும்
அருகே
ஏதேனும் வண்ணத்தில்
என் பெயரைப் போட்டிருந்தால்
மகிழ்வேன்
வெளியான மறுநாளே
வேறாரோ சிலர் பெயரில்
பாராட்டுக் கடிதங்கள்
வரைவேன்
விளம்பரந்தானே
வெற்றி பெறல் கூடும்
கருத்தை, கவிநயத்தை
கற்பனையைப் பாராட்டி
மதிக்கத் தெரியாத
மண்ணில்........

- அமிழ்தன்
நன்றி: கணையாழி

## கணையாழி

*இலக்கிய மாத இதழ். நீண்ட காலமாக வெளிவருகிறது. தொடர்புகள்: 'கணையாழி', 245 டி.டி.கே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 18*

கரங்கள் இரண்டையும் இறுக அணைத்தபடியே என் முகத்தையே இமைக்காமற் பார்த்திருந்தான். "விடைகொடு......" என்பதுபோல் அந்தச் சின்னஞ்சிறு விழிகளின் ஏக்கமான வேண்டுகோள் என்னை ஊடுருவித் தினறவைத்தது. விபரிக்க முடியாத துயரொன்றென்னை ஊடுருவித் திணறவைத்தது. வாரியெடுத்து அவன் தலையை என் மடியில் கிடத்தினேன். வாஞ்சையோடு என் தாடையைத் தடவிவிட்டான். கண்ணீரால் அவனை முத்தமிட்டேன். மெல்லத் தன் தலையை அப்படியும் இப்படியும் அசைத்தான், "அழாதே அண்ணா...." என்ற பாவனையோடு.

பெருந்துயரொன்று தன் பாதாள வாயைத் திறந்து என்னை விழுங்கி ஏப்பமிடக் காத்திருந்தது. பெருங்குரலெடுத்துச் சத்தமாய் அழுதேன், எனைமீறி.

அவன் இறந்துபோனான் மறுநாள். எனது லோகு இறந்துதான் போனான். சுவாசப்பையில் கோளாறு. இது வைத்திய அறிக்கை. சூனியம் - இது ஊரார் அறிக்கை.


ஊர் வெறுத்துவிட்டது. என்னால் இங்கு இருப்புக் கொள்ள முடியவில்லை. சனம். ஊர்ச்சனம். சனத்தின்மீது வெறுப்பின்மேல் வெறுப்பு வளர்ந்துவிட்டது. நாவுக்குச் சுவையாக எதை வேண்டுமானாலும் பேசலாமென்ற இந்தச் சனத்தின்மீது தீரா வெறுப்பாகிவிட்டது.

லோகு. இந்த ஊரார் பார்வையில் ஊனப்பிறவியாய்த் தெரிந்த, இவர்களைவிடவும் அறிவாளியான என் லோகு இறந்துவிட்டான். நானவனை இழந்துவிட்டேன். என் கண்ணிரால் அவனைப் போர்த்தி மண்ணுட் புதைத்துவிட்டேன். நான் தனியன் என்ற உணர்வு என்னுள்.

என் வீட்டு முற்றத்து மாதுளை இப்போ நிறையவே காய்த்துக் கிடக்கிறது. ஆனால் லோகுதான் இல்லை. மாதுளம்பழத்தைச் சின்னக் கைகளால் உடைத்துப் பங்குபிரித்து எனக்கு ஊட்டிவிடவும் நான் அவனுக்கு ஊட்டிவிடவும் என் லோகு இப்போ என்னோடு இல்லை.

அந்தச் சின்னஞ்சிறு மனிதனின் பிறப்பு வளர்ப்பை சல்லரித்த சனங்களைப்போல், என்வீட்டு முற்றத்து மாதுளம்பழங்களையும் அணில்களும் வெளவால்களுமாய்ச் சல்லரித்துச் செல்கின்றன. இந்த வெளவால்களுக்கும், இந்தச் சனங்களுக்கும் பெரிய வித்தியாசங்கள் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.●

www.tamilarangam.net



கி.பி.அரவிந்தன்

# தமிழ் (தமிழர்) = பயங்கரவாதம் + பிசாசு

பெப்ரவரி சுவடுகள் இதழில் தாய்லாந்து பௌத்தமதத் துறவியின் கருத்துகள் தொகுக்கப்பட்டிருந்தன. தாய்லாந்து மொழியில் தமிழ் என்பது பயங்கரவாதம் என்ற அர்த்தத்தில் புழங்குவதாயும், அச்சொல் ஸ்ரீலங்கா பௌத்த துறவிகள் மூலம் வந்திருக்கலாம் எனவும், சிங்களவரது இடங்களை வடக்கிலிருந்து வந்த தமிழர்கள் (சோழர்கள்) பிடித்து வன்முறையில் ஈடுபட்டிருந்ததால் அவ்வாறு ஒரு சொல் புழக்கத்திற்கு வந்திருக்கலாம் எனவும் அத்துறவி கூறியிருந்தார். அத்துறவியின் கூற்று ஊகமாக எனக்குப் படுவதுடன், சிறுவயதில் படித்த தகவல் ஒன்றையும் என் நினைவுக்குக் கொண்டுவந்தது.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் 'ஒன்றே உலகம்' என்ற ஒரு நூலை எழுதி வெளியிட்டதாய் என் நினைவு உறுத்துகின்றது. இப்போது அந்நூல் கிடைக்குமா என்பது தெரியவில்லை.

70ஆம் ஆண்டுகளுக்கு முன் யாழ் மத்திய கல்லூரி நூலகத்தில் இப்புத்தகத்தைப் படித்தேன். இது ஒரு கட்டுரைத் தொகுப்பு என்றே நினைக்கிறேன். தமிழ், தமிழரின் பரவலாக்கம் பற்றிய தகவல்களுடன் 'தமிழும்தான் உலகம்' என நிறுவவும் முயன்ற நூல் என்றே நினைக்கிறேன். இந்நூலில் உள்ள கட்டுரை ஒன்றில், பர்மாவில் (தற்போது மியான்மார்) தமிழ் என்றால் பிசாசு என்ற அர்த்தத்திலேயே அம்மொழியில் வழங்குவதாகவும் குறித்துள்ளார். பர்மாவும் பௌத்தமத


www.tamilarangam.net

பெரும்பான்மை கொண்ட நாடுதான். தாய்லாந்தை அண்டை நாடாகக் கொண்டது. எனவே பர்மிய மொழியில் இருந்தும் தாய்லாந்து மொழிக்கு இச்சொல் பரவியிருக்கலாம். அந்த நூலில் இன்னும் பல சுவையான தகவல்கள் உள்ளதாய் இரைமீட்க முடிகிறது.

திருவெம்பாவைப் பாடல்கள் தமிழ் என்று தெரியப் படாமலேயே மந்திரமாய் உச்சரிக்கப் படுவதைத் தான் கேட்டதாயும், ஆச்சரியமடைந்ததாயும் அடிகளார் குறித்துள்ளார். எந்த நாட்டில் இது நிகழ்ந்தது என்பது என் நினைவிற்கு வரமாட்டேன் என்கிறது. கம்போடியா அல்லது தாய்லாந்தாக இருக்கலாம்.

இராமாயண நாட்டியங்கள் கிராமிய அளவில் நடத்தப் படுவதாயும் - அது வால்மீகி இராமாயணமாய் இல்லாமல் கம்பனின் இராமாயணமாய் இருந்ததாயும் கூறும் கூற்றும், அதிலேயே உள்ளது என நினைக்கிறேன். இந்நூலில் உள்ள கட்டுரை ஒன்றில்தான் மொழிகளுக்கு அடைமொழி இட்டுச் சிறப்பித்ததும் இருக்கிறது. காதல்மொழி பிரெஞ், பக்திமொழி தமிழ் இப்படிப் பல மொழிகளைச் சிறப்புகளால் வகுத்துள்ளார்.

சோழர்கள் வங்காளக் கடலைக் கடந்து




படைபலத்தினால் பல நாடுகளை வெற்றி கொண்டார்கள். சிறந்த கப்பல்படையைக் கொண்டிருந்த இவர்கள் இந்நாடுகளை யெல்லாம் கொள்ளையடித்தார்கள். அவ்வேளைகளில் பிசாசுகள் போல் நடந்தார்கள் போலும். நல்லவேளை கொள்ளையர் என்று வழங்காமல் போயிற்று என்பது ஆறுதலாய் உள்ளது.

தனிநாயகம் அடிகளார்க்குத் தமிழ், தமிழர் மீதான பற்று அளவிடற்கரியது. 'என்னை நன்றாய் இறைவன் செய்தான், தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறு....' என்பது அவரது புகழ்பெற்ற கூற்றாகும்.

மலேஷியப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராய் இருந்தவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனர். அந்த வகையிலேயே முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேஷியத் தலைநகரான கோலாலம்பூரில் இடம்பெற்றது.

தனிநாயகம் அடிகளார் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தமிழை ஆராய்ந்தார். அந்நோக்குடனேயே உலகெங்கும் பயணம் செய்தார். அடிகளாரின் பணியும் பங்கும் மறக்கப் பட்டுள்ளது. இப்படிப் பலர்.

## II

இவ்வேளையில் இன்னொரு விடயம் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இதுவும் மேற்குறிப்பிட்ட விடயத்துடன் சம்பந்தம் உள்ளதாய்க் கருதுகிறேன்.


எனது கவிதை நூலான 'முகம்கொள்' விமர்சனக் குறிப்பில் சிவசேகரம் அவர்கள், "ராஜராஜனின் குதிரையின் குளம்பதிர்ந்த மண் பற்றிப் பேசும்போது மனம் சற்றுத் துணுக்குற்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒருவகை வரலாற்றின் 'நிராகரிப்பு' போக்கு போல் எனக்குப் படுகின்றது; வரலாற்றுக் குருட்டுப் பார்வையுமாகும். வரலாற்றின் எந்தப் பக்கமும்

www.tamilarangam.net

கறுப்பென்றும் வெள்ளையென்றும் மட்டும் பிரிக்கப் படுவதில்லை. ஒளியும் இருளும் கலந்தாகவே உள்ளது.

ராஜராஜசோழன் இலங்கைமீது படையெடுத்தான். வங்காளக் கடலில் ஆதிக்கம் கொண்டிருந்தான். வங்காளக் கடலின் கிழக்கே உள்ள நாடுகளை வெற்றி கொண்டான், கொள்ளையடித்தான். உள்நாட்டில் சாதியமைப்பையும், நால்வர்ணத்தையும், தாசித்தொழில் போன்ற இன்னோரன்ன முறைமைகளையும் கடைப்பிடித்தான்.



ஆனால் சமூகவளர்ச்சியில் நிலஉடைமையில் இருந்து தமிழகம் மாறும் சூழ்நிலையை அவர்கள் (ராஜராஜனும், சோழர்களும்) தோற்றுவித்தார்கள். முற்போக்கான முதலாளியக் கட்டம் 'கரு'நிலையைப் பெற்றிருந்தது. நாடுகளைக் கைப்பற்றியதால் மூலதனம் திரளத் தொடங்கியிருந்தது. கப்பல் கட்டுதல், சுரங்கத் தொழில், இரும்பு, உருக்குத் தொழில், பட்டுத் தொழில், பருத்தித் துணி உற்பத்தி, சர்க்கரை உற்பத்தி, சாய உற்பத்தி ஆகியவை உயர்வளர்ச்சி நிலையில் இருந்தன. கலைகளும் கூடத்தான்.

கப்பல் கட்டும் தொழிலைப் பொறுத்தவரை 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய வணிகர்கள் தமக்கு வேண்டிய கப்பல்களைத் தமிழகத்தில் கட்டிக் கொண்டார்கள் என நாட்டுப்புற இலக்கியங்களில் இருந்து அறியமுடிவதாய்க் குறிப்பொன்றும் உள்ளது.

இந்நிலையில்தான் ஐரோப்பியரின் நுழைவு இடம்பெற்றது. இதனைத் தமிழகக் கட்டுரையாளர் பாவைநாடன் அவர்கள் "வெள்ளையரின் நுழைவு காந்தாரி கருவைக் கலைக்கும் அம்மிக் குழவியாகச் செயல்பட்டது" என நயத்துடன் கூறியுள்ளார்.

ராஜராஜசோழன் மட்டுமா துணுக்குறச் செய்கிறான் - நிலஉடைமைச் சமுதாயத்தின் எந்த மன்னர்கள்தான் - எத்தேசத்தவராயினும் - துணுக்குறச் செய்யவில்லை. இப்படி மன்னர்களின் துணுக்குறச் செய்யும் செயல்கள்தானே இன்றைய ஐரோப்பா. நாகரிகம், விஞ்ஞானம், வளர்ந்த சமூகம், நேரந்தவறாமை, உரத்துப் பேசாமை, இவ்வளவும், இதற்கும் மேல் நமது புற்றீசல்களான படையெடுப்பும், மயக்கமும், இந்த ஐரோப்பியர் அடித்த கொள்ளையாலும், கொலையாலும் விளைந்தவைதானே.

இவர்களது மூலதனத் திரட்சி எங்கிருந்து வந்தது? தமிழகக் கோயில்களின் கருவரைக் கூரைகளை வேய்ந்திருக்கும் தங்க ஓடுகளின்கீழ் இரத்தம் கசிகின்றதுதான். சோழர்களின், இராஜராஜனின் 'பயங்கரவாதம்' தெரிகின்றதுதான். ஆனால் லண்டனின் குடியிருப்பு வீடுகளின் ஒவ்வொரு கல்லின் வீழும், ஒரு தலைமுறை முன்னரான இலங்கையரின் இரத்தமுமல்லவா கசிகின்றது. என் மனம் துணுக்குறுகின்றது இவற்றுக்குத்தான்.

www.tamilarangam.net

# படுகொலையும் எதிர்காலமும்

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 88

சுவடுகள்

இலங்கையின் வரலாற்றில் இன்னொரு அரசுத் தலைவரது படுகொலையாக பிரேமதாசாவின் படுகொலை திகழ்கிறது. அதிகளவு அதிகாரங்களைக் குவித்த ஜனாதிபதி அதிகார முறை நடைமுறைக்கு வந்தபின் இரண்டாவது நபராக ஜனாதிபதிப் பதவியேற்றவர் பிரேமதாசா. தாழ்த்தப்பட்ட மக்களிடையே இருந்து முன்னணி அரசியலுக்கு வந்து, நாட்டின் தலைவராகத் தெரிவான பிரேமதாசாவை மக்களின் நண்பன் எனச் சில சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் புகழ்கின்றன.

பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டது பற்றிப் பல்வேறு ஊகங்களும், அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை ஆதாரப்படுத்தக்கூடிய சூழல் இன்றுவரை வரவில்லை. இனியும் வருமா என்பது கேள்விக்குறியே. மக்கள்விரோத அரசுக்குத் தலைவராக இருக்கையில் பிரேமதாசா கொல்லப்பட்டமையும், கொலை நிகழ்ந்த விதமும் இது ஒரு அரசியற் படுகொலை என்பதைக் கேள்விக்கிடமின்றி நிரூபிக்கின்றன.

பிரேமதாசா தனது அரசியலில் முதன்மைப்படுத்தியது, இந்திய எதிர்ப்பு என்ற (கோசத்தையே). ஆரம்பத்தில் இந்திய எதிர்ப்பாளராக இருந்தபோதும், ஜேவிபி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்வரை தனது எதிர்ப்பை மட்டுப்படுத்தியே வைத்திருந்தவர் பிரேமதாசா. ஜேவிபி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவிடும் என்ற அச்சத்திலேயே தனது இந்திய எதிர்ப்பைத் தீவிரப்படுத்தியவர் அவர். மற்றும்படி, இனவாதியாகவும், மக்கள் விரோதியாகவும், எதிர்த்தரப்புகள்மீது கடும் ஒடுக்குமுறையைப் பிரயோகிப்பவராகவுமே பிரேமதாசா இருந்தார். இவை பிரேமதாசா கொல்லப்பட்டமை பற்றி யாரும் பெரிதாகக் கவலைப்படாமல் இருக்க முக்கிய காரணங்களாகின்றன.

பிரேமதாசாவின் காலத்துக்கு முன்பும் பத்திரிகைகள்மீது பல நெருக்கடிகள் பிரயோகிக்கப் பட்டுள்ளன. ஆனால் இவரது காலத்திலேயே அது மிக மோசமாக நடத்தப்பட்டது. பிரேமதாசாவுக்கு முந்திய தலைவர்களும் மக்களை ஒடுக்க வன்முறையையும் படுகொலைகளையும் பாவித்திருக்கின்றனர். பிரேமதாசாவின் காலத்திலேயே இது மிகமோசமான அளவில் நிகழ்ந்து, ஏறத்தாழ அறுபதாயிரம் சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் எந்தவிதத்திலும் குறையாமல் இருந்தன.

www.tamilarangam.net

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

பிரேமதாசா பற்றிப் பல தமிழ் அரசியற் குழுக்கள், 'இனப்பிரச்சனையைத் தீர்க்கும் மன உறுதி படைத்தவர்' என்றும் 'நம்பிக்கைக்குரியவர்' என்றும் புகழ்மாலை சூடியிருக்கின்றன. ஆனால் இவற்றுக்குப் பின்னால் இருந்த பிரேமதாசாவின் உண்மையான முகம் என்ன என்பது இப்போதும் யாரும் அறியாதது. பிரேமதாசாவுக்குத் தனது அதிகாரத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதில் இருந்த குறிக்கோள், லட்சம் பேருக்குமேல் பலியெடுத்துவிட்ட இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் இருந்ததில்லை. இறப்பதற்குமுன்வரை தெரிவுக்குழுவின் முடிவையே பார்த்திருப்பதாகப் பம்மாத்துக் காட்டியவர் பிரேமதாசா. தெரிவுக்குழுவை மிதவாதத் தமிழ்க்குழுக்களே நிராகரித்துவிட்ட பிறகும், பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும் தெரிவுக்குழுமுன் தமது தீர்வு என எதையும் முன்வைக்காத போதும் பிரேமதாசா, தெரிவுக்குழு பற்றி நம்பிக்கை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொண்டது தெளிவான ஏமாற்று வேலையன்றி வேறல்ல. தமிழ், முஸ்லிம் மக்களது பிரச்சனைகள் இலங்கைத் தீவுக்குள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையை மேலும் பொய்யாக்கியவர் பிரேமதாசா. சிங்கள இனவாதத்தின் பிரதிநிதியாகவே தம்மை நிலைநிறுத்திய அவரால் மக்களது உண்மையான சுபீட்சத்திற்காக எதுவும் செய்யமுடியாது என்பது தெளிவு.

இவ்வாறான நிலைகளில் பிரேமதாசாவின் மரணம் இலங்கையின் சகல தரப்பு மக்களையும் ஏதோ ஒருவகையில் திருப்திப்படுத்தவே செய்தது. ஆனால் இதன் பின்னணியில் உள்ள உண்மை என்ன? பிரேமதாசாவை ஒழிப்பதால் பிரேமதாசாவினது அரசியல் மறைந்துவிடுமா? அவரது மறைவுக்குப் பிறகும் அதே ஐதேக அரசே ஆட்சியில் உள்ளது. அதே நடைமுறைகளும், மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும், இனவாதமும் மாறாமல் இருக்கப் போகின்றன. அந்நிலையில் மரணம் ஏற்படுத்திய நல்விளைவு பூச்சியமாகவே இருக்கப் போகிறது.

தனியொரு நபரைப் படுகொலை செய்வதன்மூலம் அரசியல் மாற்றங்கள் பெரியளவில் வந்துவிடப் போவதில்லை. இனவாதமும், சகல மக்கள் மீதான அடிப்படை உரிமை மறுப்பும், மக்கள் சர்வதேச நிறுவனங்களால் சுரண்டப்படுவதும் வரும் ஆட்சியிலும் தொடரவே போகின்றன. இவற்றை மாற்றும் அரசியற் சக்திகள் மேலெழுந்து வருவதே இன்றைய தேவையாகும். நம் அனைவரது செயற்பாடுகளும் அதனையே மையப்படுத்தி இருத்தல் வேண்டும்.

முகவரி:
Herslebs Gate 43,
0578 Oslo

www.tamilarangam.net

## கடல்கடந்த வன்முறைகள்

அண்மையில் கனடாவின் பொதுவீதி ஒன்றில் சில தமிழ் இளைஞர்கள் தமக்கிடையில் துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டார்கள். இதேமாதிரியான சம்பவம் ஒன்று, மீண்டும் சிங்கள இளைஞர்களைச் சுட்டு நிகழ்ந்தது. தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட வன்முறைகள், தமிழர்கள் அகதிகளாக வந்த அனைத்து நாடுகளுக்கும் பொதுவிதி போல ஆகிவிட்டன. இதற்கு நோர்வேயும் விதிவிலக்கல்ல.

வன்முறைகள் இவ்வாறு அதிகரித்துவரும் போக்கானது, எமது சமூகத்தில் வன்முறைக் கலாசாரம் தோன்றி வளர்ந்து வருகிறதா என்ற கேள்வியையும், சமூகம் தொடர்பாகச் சிந்திப்போரது நடவடிக்கைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது. ஒவ்வொரு தனிமனிதனதும் சமூகப் பொறுப்பும் இங்கு கேள்விக்கு உள்ளாக்கப் படுகிறது.

வன்முறைகளை நடத்துவோரின் எண்ணிக்கை மிகமிகச் சொற்பமானதே என்றாலும், இவ்வாறான வன்முறைகள் சகல தமிழரையும் பாதிக்கின்றன. இந்த வன்முறைகள் மிகச்சிறு காரணங்களுக்காகத் தோன்றி, வளர்ந்து விஸ்வரூபமெடுக்கின்றன. ஒரு கட்டத்தில் வன்முறைகள் கட்டுப்படுத்த முடியாத அளவில் வளர்ந்து, சிலரைப் பலியெடுக்கும் நிலைக்கும் வருகின்றன.

இந்த வன்முறைகள் நிகழும்போது நாம் அனைவரும் மௌனமாக இருப்பதால், வன்முறைகளுக்கு நாமும் பொறுப்பு என்றாகிறது. அவற்றைக் கண்டிக்காமல் வளரவிடுவதால் இந்த வன்முறைகள் எம்மைத் தீண்டும்போது எம்மால் எதுவும் செய்தல் இயலாததாகிவிடுகிறது. இந்த வன்முறைகளால் எந்தவித லாபமும் யாருக்கும் கிடையாது. பதிலாக தஞ்சம்புகுந்த இடத்தில் அடித்துக்கொண்டார்கள் என்ற அவப்பெயரும், அமைதியைக் குலைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் சகல தமிழரையும் நோக்கி வரும். இதை நிறுத்தமுடியாது. ஏனெனில் செய்திகளும் அபிப்பிராயங்களும் நாம் நினைக்காத, நாம் எதிர்பார்க்காத விதத்திலேயே பெரும்பாலும் பரவுகின்றன. ஒரு தமிழரோ, ஒருசில தமிழரோ செய்யும் வன்முறைகள் முழுச் சமூகமும் செய்வது போன்ற தோற்றத்தை இந்த நாடுகளில் ஏற்படுத்தும்போது, அந்த அபிப்பிராயத்தின் எதிர்விளைவுகள் வன்முறையை ஏற்றுக்கொள்ளாத, வன்முறையை நிராகரிக்கிற தமிழர்களையும் பாதிக்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

www.tamilarangam.net

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

வன்முறைகள் எல்லாச் சமூகத்திலும் வெவ்வேறு அளவுகளில் உள்ளவைதான். ஆனால் அகதி என்று வந்த இடத்தில் நாம் எம்மைப் பண்பானவர்களாகக் காட்டாமல் வன்முறையாளராகக் காட்டுவதால், எம்மீதுள்ள அனுதாபமும் குறைகிறது. இது எமது தேசத்தின் விடுதலையையும், அங்கு தினமும் தமது இனிய உயிர்களைத் தியாகம் செய்து போராடும் போராளிகளையும் மக்களையும் கொச்சைப் படுத்துகிறது. எமது நியாயமான போராட்டமே கொச்சையாக்கப் படுகிறது.

வன்முறையை நாம் எதிர்க்கிறோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை அனைவரும் கொள்ளவேண்டும். வன்முறைகளைக் கண்டிக்கப் பின்நிற்காததோடு அமைதியான முறையில் தீர்வுகளைத் தேடவேண்டும். எல்லாப் பிரச்சனைகளுக்கும் வன்முறை மாத்திரமே தீர்வல்ல. வன்முறைகளைக் கண்டிப்பதிலும், பிரச்சனைகளுக்கு அமைதியான தீர்வு ஏற்படுவதிலும் சிலர் ஈடுபட்டு வருவது பாராட்டத் தக்கது.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அமைப்புகளும் இங்கு தமிழர்களிடையேயான வன்முறையைப் பகிரங்கமாகக் கண்டிக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் வன்முறையை அமைப்புகள் கண்டிக்காதுவிட்டால் அவை, வன்முறைக்கு மறைமுகத் தூண்டுதலாக இருப்பது போலவே கொள்ள இடமுண்டு. அவ்வாறு கண்டித்தால், வன்முறையில் ஈடுபடுபவர்கள், அடுத்த தடவை வன்முறையில் ஈடுபடுமுன் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி யோசிக்கவும், தமது பிரச்சனைகளை அமைதியான முறையில் அணுகவும் வாய்ப்பு உண்டாவதுடன், எம்மவரிடையேயான பிளவுகள் களையப்பட்டு, ஆரோக்கியமான சூழல் உருவாகும்.


அரசியற் தஞ்சம் கோரிவந்த நாடுகளில் தமிழ் மக்களில் மிகச்சிலரால் நிகழ்த்தப்படும் வன்முறைகளை எப்போதும் சுவடுகள் கண்டித்தே வந்திருக்கிறது. இவ்வாறே அனைத்துப் பத்திரிகைகள் சஞ்சிகைகளும், பொது அமைப்புகளும் இவ்வாறான வன்முறைகளைக் கண்டிப்பதுடன், எம்மவரிடையே அமைதியான சூழலும் ஒத்துழைப்பும் ஏற்படவும் வழிவகுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகோள் விடுக்கிறது.

சுவடுகள் 45,
சித்திரை'93


சுவடுகள்

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway


www.tamilarangam.net



VINNER: Ingvild Aspøy — seler i klasse 0—7 år.




VINNER: Kaja Berdychowska — seler i klasse 7—12 år.



அண்மையில் நோர்வேயின் முன்னணித் தினசரி, 'ஆப்தன்பூஸ்தன்' சிறுவர்களுக்காக ஓவியப் போட்டி ஒன்றை நடத்தியது. இதில் இருபிரிவுகளில் வெற்றி பெற்ற ஓவியங்கள் இவை. பல வண்ணங்களில் தமது ஆற்றலை வெளிப்படுத்திச் சிறுவர்கள் வரைந்த ஓவியங்கள் இங்கு தவிர்க்க முடியாமல் கறுப்பு வெள்ளையில் பிரசுரமாகின்றன.

– அபிமன்யு –

www.tamilarangam.net



# கண்டது, கேட்டது, கண்டவர் சொன்னது

ஆயலான்

அண்மையில் 'மறையாத மறுபாதி' எனற அர்த்தம் பொதிந்த தலைப்புடன் ஒரு கவிதைத் தொகுதி கையில் கிடைத்தது. அழகிய ஓவியத்துடன் சற்றே பொருத்தம் குறைந்த நிறச்சேர்க்கை கொண்ட (நீலம், சிவப்பு) அட்டையுடன் அழகிய முறையில் பதிக்கப் பட்டுள்ளது இத்தொகுதி. பல கவிஞர்களது கவிதைகளைத் தொகுக்கும் போக்கில் அமைந்த இத்தொகுதியின் சிறப்பம்சம், அனைத்துக் கவிதைகளையும் பெண்கள் எழுதியிருப்பதுதான். தவிரவும் புகலிடத்து இலக்கியமாகவும் உள்ளது இத்தொகுதி.

இவ்வாறான தொகுதிகளில் தரத்தை மிகக் கனாராக எதிர்பார்ப்பது அவசியமற்றது. ஏனெனில் இத்தொகுதி வெறுமனே இலக்கியத்திற்குத் தொண்டு செய்வதை நோக்கமாய்க் கொண்டிராமல், பெண்களுக்கு ஒரு போர்வாளைத் தயார் செய்வதையே இலக்காய்க் கொண்டிருப்பதுடன், பெண்களது போர்க்குரலைப் பதிவு செய்வதாயும் உள்ளது. இவ்வாறான தொகுதியொன்று சிலகாலம் முன்னர் ஈழத்தில் 'சொல்லாத சேதிகள்' என்ற தலைப்பில் வெளியானது பலருக்கு நினைவிருக்கலாம்.

கவிதைகள் பெண்களின் பாதிப்புகளைப் பன்முகப்பட்ட விதத்தில் சொல்வதுடன், சில கவிதைகளும், கவிதைப் பகுதிகளும் அற்புதமான இலக்கியங்களாகத் திகழ்கின்றன. மறுபுறத்தில் வேறுசில, வெறும் வார்த்தைக் குவியல்களாய் அடங்கிவிடுகின்றன. ஆயினும் இவைகூட சிலசமயங்களில் தமது நோக்கத்தை, கவிதை என்றில்லாமலே அடைந்தும்

www.tamilarangam.net

விடுவது குறிப்பிடத் தக்கது. சில கவிதைகள் இருமொழிகளிலும் வெளியாகியுள்ளன. இது அவசியம்போலத் தோன்றவில்லை; பதிலாக இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளை மொழிபெயர்த்து ஒரு தனித்தொகுதியாய் பிறமொழிகளில் வெளியிடுவது நல்லது.

இந்நூலை இருவருக்குச் சமர்ப்பணம் செய்துள்ளனர். ராஜினி திரணகம, கவிஞர் சிவரமணி ஆகியோருக்குச் சிறுகுறிப்புடன் சமர்ப்பணம் செய்யப் பட்டுள்ளது. யாருக்குச் சமர்ப்பணம் செய்வது என்பதில் வெவ்வேறு கருத்துகள் ஒவ்வொருவருக்கும் இருக்கும். ஆனால், இவர்களுடன் அன்னை பூபதிக்கும் சேர்த்துச் சமர்ப்பித்திருப்பின் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. ஒரு பெண்ணாகவும், போராளி போலவும், தாயாகவும் இருந்து, தேசவிடுதலைக்காய் உயிர்தந்த அவரது தன்னலமற்ற தியாகத்தை நாம் மறக்காமல் இருத்தல் வேண்டுமல்லவா?

இந்த நூலைப் பணம்கொடுத்து வாங்கி ஆதரவளிப்பது அனைவரதும் கடமையாகும். தொடர்புகள்: EXIL, 27 Rue Jean Moulin, 92400 Courbevoie, France.

அண்மையில் ஐரோப்பிய சஞ்சிகை ஒன்றில் 'மறுபடியும்' படவிமர்சனம் பார்க்க நேர்ந்தது. பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் பாராட்டிய மறுபடியும் படத்தை வேறொரு கோணத்தில் அணுகியிருந்தது அந்தச் சஞ்சிகையன் படைப்பொன்று. படத்தின் இறுதியில் தனது கணவனைப் பிரிந்து தனியே வாழ்வது என்ற முடிவை எடுக்கும் துளசி, எதற்காக ஒரு சிறுமியைத் தத்தெடுத்து அவளுக்காகத் தான் வாழவேண்டும்? ஏன் தனக்காக (தனியே) வாழக்கூடாது? இப்படிக் கேள்விகளை அந்தச் சஞ்சிகை எழுப்பியிருந்தது.

எனக்குப் படம் பார்க்கும்போது இப்படியொரு கேள்வி எழுந்ததில்லை. இப்போது அந்தக் கேள்வி எனது மனதிலும் எழுகிறது. எதற்காக அந்தப் பெண் தனக்காக வாழாமல் இன்னொருவருக்காக வாழவேண்டும்? இன்னொருவருக்காக வாழ்வது நல்ல காரியம்தான். எல்லோராலும் அதைச் செய்யமுடியாது என்றே நினைக்கிறேன். ஆனால் வாழ்க்கையில் எப்போதும் பெண்கள் மற்றவர்களுக்காகத் தான் வாழ்கிறார்கள் என்கிறபோது, ஒரு நல்ல முடிவை எடுத்த துளசியாவது தனக்காக வாழ்ந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் மனதில் எழுவது இயல்புதான்.

இப்படியான முடிவுகளை எடுக்கச் சற்றே துணிச்சல் அவசியம். அது ஏற்கனவே பாலுமகேந்திராவிடம், துளசியைத் திருமணத்திற்குள் தள்ளாது விட்டதன்மூலம் வெளியாகியிருக்கிறது. இன்னும் சற்றே, ஒருபடி மேலே வந்தால் சரி.




கடந்த ஒஸ்கார் விருதுக்களின்போது, சிறந்த பிறமொழிப் படங்களுக்கான தேர்வில் பரிசிலைத் தட்டியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

‘இந்தோசீனா’ என்ற படம். பிரான்சில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம், காதல், வீரம், போர், பிரிவு, சோகம் என்ற பல உணர்வுகளின் கலவை.

இந்தப் படத்தை அண்மையில் பார்க்கக் கிடைத்தது. வியற்நாமின் பிரெஞ்சுக் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்ததாகக் கதைப் பின்னணி. கதையின் முக்கிய அம்சம், பிரெஞ்சுப் பெண் ஒருவரால் வளர்க்கப்பட்ட வியற்நாமியச் சிறுமி ஒருத்தி, பிரெஞ்சுப் படைவீரன் ஒருவனைக் காதலித்து, அவனைப் பிரிய நேரிட்டு, அவனது குழந்தையைத் தனது வளர்ப்புத் தாயிடம் ஒப்படைத்துவிட்டுப் போராளியாக மாறுவது. பின்பு அவளது நாடு விடுதலை அடைகிறபோது முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள மேல்நாடு வருகிறாள் தாய். அவளைச் சந்திக்க அவனது மகன் முயல்கிறான். ஆனால் அவள் அதனைக் கவனியாமல் தன்பாட்டில் போய்விடுகிறாள்.

இப்படி மிகச் சுருக்கிச் சொல்வது சரியல்ல என்றாலும் வேறு வழியில்லை. சரி, பிரச்சனை என்னவெனில் கடைசியில் அந்தத் தாய் தனது மகனை ஏன் சந்திக்க மறுக்கிறாள், அல்லது அவனைத் தன் மகனாகக் காட்டிக்கொள்ள ஏன் விரும்பவில்லை? இதன்மூலம் கொம்யூனிற்றுகள் அடிப்படை மனிதபாசம் இல்லாதவர்கள் எனக் காட்டுவதுதான் நோக்கமா அல்லது, அது அப்படியே கதையாகியது எந்தவித உள்நோக்கமும் இல்லாமலா?

புரட்சியாளர்கள் பற்றிய கதைகளைத் திரைப்படமாக எடுக்கிறபோது, அவர்களது மன உணர்வுகளைக் கொச்சைப் படுத்தாமல் எடுக்கப்படுவது அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. ‘ இந்தோசீனா’ படம் அந்தவகையைச் சேர்ந்ததல்ல என்பது எனது அபிப்பிராயம். சிறந்த வெளிநாட்டுப் படம் என்று இந்தப் படத்திற்கு விருது வழங்கப்படக் காரணம், அந்தப் படத்தில் உள்ள படைப்பாற்றலா அல்லது கொம்யூனிஸ எதிர்ப்பா என்பது எனக்குப் புரியவில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்களின் எதிர்கால நல்வாழ்விற்கு சொந்தநாடா வந்தநாடா சிறந்தது? என்ற தலைப்பில் ஒரு பட்டிமன்றம் தமிழ்ச் சங்கத்தின் புதுவருட விழாவிலே இடம்பெற்றது. நல்ல விசயம்; இப்படியான விசயங்கள் பற்றிக் கதைப்பது நல்ல விசயம் என்பதில் யாருக்கும் இரண்டாம்பட்ச அபிப்பிராயம் இருக்கமுடியாது. ஆனால் பட்டிமன்றம் தொடங்கியவிதமே ‘ஒரு மாதிரியாக’ இருந்தது. ‘இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு ஏற்பட்டு நாம் அங்கு திரும்பிச் செல்லும் சுமுகமான சூழல் ஏற்பட்டால் என்று நினைத்துக்கொண்டு, அந்த நாடா இந்த நாடா சிறந்தது என்று வாதிடுமாறு பட்டிமன்றத்தின் தலைவர், அதில் பங்கெடுத்தோரைக் கேட்டதும், பங்கெடுக்க வந்தோருக்குச் சற்றே அதிர்ச்சி வைத்தியம்.



www.tamilarangam.net

ஒரு தலைப்பைக் கொடுக்கையில் அதைச் சரியாக வரையறுத்துக் கொள்வது அவசியம். இப்படித் திடீரென்று மாற்றங்களைச் செய்தால் பங்கெடுப்போருக்கு மட்டுமல்ல பார்ப்போருக்கும் சங்கடம்தான். தாயகத்தில் அமைதி திரும்பவேண்டும் என்பதிலோ, அங்கு வாழும் வாழ்வுக்கு இந்த நாட்டு வாழ்வு ஈடாகாது என்பது பற்றியோ யாருக்கும் சந்தேகம் இராது. ஆனால், அதைச் சொல்லவைக்க வேண்டும் என்பதற்காக தலையங்கத்தையே மாற்றம் செய்வது சரியாகத் தெரியவில்லை. கண்ணுக்கு முன்னால் தெரியும் ஒரு தளத்தில் நின்றுதான் வாதிடவேண்டும், வாதிட முடியும்.

அடிப்படையில், தற்போது உலக நாடுகளில், மனிதர் வாழச் சிறந்தவற்றில் நோர்வேயும் ஒன்று என்பது உண்மை. இதை மொட்டையாக மறுக்கமுடியாது. இங்கிருக்கும் வசதிகளும், சமூகப் பாதுகாப்பும் வேறு பல நாடுகளில் இல்லை என்பதால்தான் பல 'சோஷலிச' நாடுகளும் இந்த முன்மாதிரியைப் பாராட்டின, பின்பற்ற முயன்றன. ஆனால் அதைச் சொல்லிவிட்டால் தாய்நாட்டை அவமதித்ததாக ஆகிவிடும் என்று நினைத்ததாலோ என்னவோ தீர்ப்பு, தாய்நாட்டுக்குச் சார்பாகத் தயாரிக்கப் பட்டிருந்தது (என்றே தோன்றுகிறது).

இரு தரப்பினரும் சில சமயம் சுவையாகவும் சில சமயம் அலுப்படிக்கும் விதத்திலும் வாதிட்டார்கள். "எதிர்த்தரப்பினர் நகைச்சுவையாகப் பேசிக் கவனத்தைத் திசைதிருப்ப முயல்கின்றனர்" என்ற குற்றச்சாட்டு இருதரப்பில் இருந்தும் வந்தது நகைச்சுவை. எதிர்கால நல்வாழ்விற்கு வந்த நாடே சிறந்தது என்று வாதிட்டவர்களது வாதம் பல இடங்களில் பலமாக இருந்தது. உதாரணமாக, இங்கு உள்ள இனவாதம் தாய்நாட்டில் இல்லை என எதிர்த்தரப்பினர் கூறியதை, அங்கும் தமிழ் – முஸ்லிம் – சிங்கள மக்களிடையே நிலவும் வன்முறைகள் யதார்த்தமானவை என்னச் சுட்டிக் காட்டியது மிகச் சரியாகவே பட்டது.

ஒரு பட்டிமன்றத்தில், அங்கு கூறப்படும் கருத்துகளை மாத்திரம் செவிமடுத்துத் தீர்ப்புச் சொல்வதா அல்லது கூறப்படாத கருத்துகளையும் இணைத்துத் தீர்ப்புச் சொவ்வதா சரி என்று இன்னொரு பட்டிமன்றமே நடத்தலாம் போலத் தெரிகிறது. வந்த நாடே சிறந்தது என்ற தரப்பில் பலமான வாதங்கள் நிகழ்த்தப்பட்ட பிறகு, சொந்த நாடே சிறந்தது எனத்தீர்ப்பு வழங்கப் பட்டது சற்றே ஆச்சரியமான ஒன்று. இது ஒரு கருத்துத் திணிப்பல்லவா என்று பக்கத்தில் நின்றவரிடம் கேட்டேன். "ஐசே இது ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சி, இதிலை 'லொஜிக்'கெல்லாம் பாராதையும்" என்றார் அவர். பட்டிமன்றத்தில் பங்குபற்றியவர்கள் சிலரது அபிப்பிராயம் இதற்கு மாறுபட்டதாக இருந்தது.

வழமைபோலப் பட்டிமன்றங்களில் சபையோர் குறிப்புரைக்கென்று சில நிமிடங்கள் ஒதுக்கப் படுவதாக நினைவு. அந்த நினைவில் எனக்கருகில் நின்ற ஒருவர் பட்டிமன்றத்தில் கூறப்பட்ட 'பொயின்ற்ஸ்' எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு ஆயத்தமாக நின்று, கடைசியில் ஏமாந்தது, ஒரு வகையான துக்கம். அதை அனுபவித்தால்தான் தெரியும்.●

www.tamilarangam.net

தமயந்தி



ஊர் ஒன்று

## அத்தியாயம் 3

பூவரசங்குளம் தன் மடியில் நீரை நிறைத்து அலைகளின் சலனம் எதுவுமற்றுக் கிடந்தது. ஒற்றைப் பூவரசு தனது நீளமானதொரு கிளைக்கரத்தை குளத்தை நோக்கி நீட்டியபடி, தன்னால் முடிந்தவரை ஒரு சிறுபகுதிக்கு நிழலைக் கொடுத்து நின்றது.

குளத்தில் தண்ணீர் நிறைவாக இருப்பதைக் கண்ட பாலன் துள்ளிக் குதித்து "ஓ.... ஆ.... ஊ.... ய்ய்ய்..." என்று ஆனந்தமாய் ஓலமிட்டான்.

"நல்ல வெய்யில், தண்ணி மணியாத்தான் கிடக்கும்" என்றான் சாந்தன். குளத்தை அண்மித்ததும் தனது காற்சட்டை சேட்டைக் களைந்து கரையில் ஓர் கல்லின்மேல் வைத்துவிட்டு நிர்வாணமாகவே ஓடிச்சென்று குளத்துட் பாய்ந்து, இரண்டு தடவை முங்கி எழுந்தான் பாலன். சாந்தனும் தனது சாரத்தைக் கழற்றிப் பாலனின் உடைகளோடு போட்டுவிட்டு, சஸ்பென்ரரோடு ஓடிச்சென்று தண்ணீரில் பாய்ந்தான். அவர்கள் நின்ற இடத்தில் இடுப்பளவு தண்ணீராய் இருந்தது. இருவரும் ஒருவரோடுவர் தண்ணீரால் எத்துப் பட்டனர். இருவருமே சளைக்காமல் தண்ணீராலடித்துப் போராட்டம் நடத்தினர்.

"டேய் காதுக்குள்ளை தண்ணி போட்டுதடா" என்று சாந்தன் கத்தியபடி தண்ணீர் எத்துவதை நிறுத்திக் கொண்டான். பாலன் அவனது முகத்தின் பக்கம் தேடிச்சென்று இரண்டு, மூன்று தடவைகள் தண்ணீர் அடித்துவிட்டு நிறுத்திக் கொண்டான். பாலன் இவர்கள் இருவரின் விளையாட்டுகளையும் பார்த்தபடி கையில் ஒல்லிமிதப்புகள் இரண்டுடன் ரூபன் கரையில் நின்றான்.

"டேய், கரையில எட்டுந்தண்ணிதான், இறங்கிவாடா" கரையில் நின்ற ரூபனை அழைத்தான் சாந்தன். தனது நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறப் போகும் ஆனந்தத் துள்ளலில் ரூபனின் உடலம் சிலிர்த்துப் போனது. சேர்ட்டைக் கழற்றி அவர்களின் உடைகளுடன் போட்டுவிட்டு ஒல்லி மிதப்புகளுடன் குளத்தை நோக்கி இறங்கினான். "டேய் டேய்.... களிசாணக் கழட்டிப்போட்டு இறங்கடா" என்று அதட்டினான் பாலன். தண்ணீரில் ஒரு காலை வைத்தபடி ஒருவித மலைப்போடு அப்படியே நின்றுவிட்டான் ரூபன்.

www.tamilarangam.net

"களிசாணக் கழட்டிறதோ? எனக்குத் தெரியா... எனக்கு வெ.... க்கமா ருக்கு" பலமாத் தலையை ஆட்டி மறுத்தான் ரூபன்.

"ஓம் இவர் பெரிய இளந்தாரி, இவர்ர இத நாங்க பாத்திரப்போறம், வெக்கப்பட்டுக் கொண்டு நிக்கிறேர்..... கழட்டீற்று இறங்கடா" பாலன் மீண்டும் அதட்டினான்.

"இல்லை.... பறவாயில்லை, குளிச்சுப்போட்டு பிறகு களிசாணப் புழிஞ்சுபோட்டுப் போட்டால் மேல்ச்சூட்டில காஞ்சுபோம்" சமாளித்தான் ரூபன்.

"சரி என்னவாவது செய், இறங்கிவாடா" – சாந்தன்.

"இல்ல.... இவன் களிசாணக் கழட்டீற்று வந்தாத்தான் இவனுக்கு நீந்தப் பழக்குவன்" தான் சொல்லியும் கேட்காமல் விடுவதா என்ற தோரணையில் பாலன் கூறினான்.

தண்ணீரில் வைத்த ஒரு காலை மீண்டும் வெளியே எடுத்து, புற்தரைக்குச் சென்று ஒல்லிமிதப்புகளைத் தரையில்ச் சலித்தவனாய் எறிந்துவிட்டு, காற்சட்டையைக் களைந்து கரையிற் கல்மேற் கிடந்த உடைகளுடன் போட்டுவிட்டு நின்றான். பட்டப்பகலில் வெட்டவெளியில் தான் நிர்வாணமாய் நிற்பதை நினைத்துக் கூச்சமும் வெட்கமும் கொண்டான். நிலத்தில் கிடந்த ஒல்லிமிதப்புகளை எடுத்து முன்னால் வைத்து மறைத்தபடி குளத்தில் இறங்கச் சென்றான்.

"நடக்க நடக்க ஆடும், ஓட ஓடத் துள்ளும், அது என்ன....." தண்ணீரில் இறங்கிச் சென்ற ரூபனைப் பார்த்துச் சிரித்தபடி நொடி சொன்னான் பாலன். சாந்தன் விடையை மெதுவாக பாலனின் காதிற் சொல்ல இருவரும் சத்தமாய்ச் சிரித்தனர்.

அவர்கள் இருவரும் தன்னைத்தான் கேலிபேசிச் சிரிக்கிறார்கள் என உணர்ந்து, மென்மேலும் வெட்கமும் கூச்சமும் அடைந்தான் ரூபன்.

இடுப்பளவு தண்ணீரில் நின்றபடி பாலன் தன் கைகள் இரண்டையும் தண்ணீர் மட்டத்தோடு நீட்ட, ரூபன் அவனது கைகளில் குப்புறக் கிடந்தபடி, தனது கைகளையும், கால்களையும் படபடவென்று தண்ணீரின்மேல் அடித்தான். தலையை நிமிர்த்தி, கைகளை முன்நோக்கி வீசி எறிந்து, பின்னோக்கி வலித்து இழுக்கும்படியும், அதேவேளை, கால்களால் தண்ணீரில் உதைந்து தள்ளும்படியும் சொல்லிக் கொண்டிருந்தான் பாலன்.


சாந்தன் பூவரசில் ஏறி, குளத்தை நோக்கி வளைந்த கிளைக்கு வந்து, கரணம் அடித்துத் தண்ணீரில் விழுந்து விளையாடினான். சிறிதுநேரம்வரை ரூபனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுத்துவிட்டுப் பின் ஒல்லிமிதப்பில் அவனைக் கிடத்தி, தான் சொல்லியபடி நீந்தவேண்டும் எனவும், நடுக்குளமாகப் போகக் கூடாதெனவும் கட்டளையிட்டுவிட்டு, பாலன் சாந்தனோடு சேர்ந்து இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையிலிருந்து இக்கரைக்கும், போட்டிக்கு நீச்சலடித்தான்.

கரையேறிய மூவரும் வெய்யிலில் சிறிது உடம்பு காய்ந்ததும், உடையணிந்து முடித்து மேற்குக் கண்ணகையம்மன் கோயிலை நோக்கி நடந்தனர். தனது நீண்டகாலக் கனவு நிறைவேறிவிட்ட திருப்தி ரூபனுக்கு. "இந்தச் சனி, ஞாயிறும் வந்து பழகினால் நீச்சல் பிடிச்சுப் போடலாம்" என்று தன்னுள் எண்ணிக் கொண்டான்.

"தம்பி ரூபன்..... ரூபன்" மாமியின் குரல் கேட்டு விழித்தவன், விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டதென்பதை உணர்ந்தான்.

"மத்தியானமாகப் போகுது எழும்பு" மாமி கூறிவிட்டுத் தேனீர்க் கோப்பையை அவனது தலைமாட்டில் வைத்துவிட்டு, குசினிக்குள் சென்றுவிட்டாள். சோம்பல் முறித்து விழிகளைக் கசக்கியபடி எழுந்த ரூபன், இரவு தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த சாந்தனைத் தேடினான். சாந்தன் இல்லை. அவனது போர்வை மட்டும் கிடந்தது. "மாமி, .... சாந்தன் எங்க போட்டான்?" படுக்கையை விட்டெழுந்து, தேனீர்க் கோப்பையைக் கையில் எடுத்தபடி

www.tamilarangam.net



குசினிக்குள்ளிருந்து வரப்போகும் மாமியின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"அவன் காலம உன்னை எழுப்பிப் பாத்தான், நீ எழும்பேல்ல. தூண்டலுக்குப் போட்டான். நீ எழும்பின உடன உன்னைப் பாலத்தடிக்கு வரச்சொன்னவன். பிட்டவிச்சிற்றன் சாப்பிட்டிட்டுப் போ"

ஒரே மூச்சில் தேனீரைக் குடித்து முடித்தவன் "நான் போட்டு வாறன் மாமி" என்று கூறிவிட்டு மாமியின் பதிலுக்குக் காத்திராதவனாய் எழுந்து வெளியே சென்றான்.

"சத்து வந்திற்றுப் போ ரூபன்" மாமி கூப்பிட்டாள். பொறுமையை இழந்தவனைப் போல் குசினிக்குள் நுழைந்த ரூபனிடம், "இதையாவது திண்டுபோட்டு அவனுக்குந் தாறன், கொண்டேய்க் குடு" என்று கோப்பையுடன் நீட்டினாள் மாமி. "இதென்ன மாமி?" கோப்பையை வாங்கியவாறே வினவினான்.

"சின்னமாடு ராத்திரிக் கண்டு போட்டது. காலமை கொஞ்சம் கடும்பு கறந்தனான். அது சனியன் விடமாட்டனண்டிட்டுது, ஒரு கொஞ்சம் போலத்தான் கறந்தனான்" மாமி கூறிவிட்டு, அடுப்பில் ஆவியை வெளியிட்டுக் கொண்டிருந்த பிட்டுக்குழல் வாயைத் தேங்காய்ச் சிரட்டையால் மூடினாள்.

சாந்தனுக்கென்று சிரட்டையிலிட்டு, பூவரசமிலையால் மூடிக்கொடுத்த கடும்புடன் கண்ணாஓடைப் பாலத்தை அண்மித்த ரூபனுக்கு பாலத்தின்மேல் சாந்தனும், பாலனும் நிற்பது தெரிந்தது. ஒரே ஓட்டமாய் ஓடிச்சென்று பாலத்தில் அவர்களைச் சென்றடைந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலைக்களியில் மழைவெள்ளம் கூடிப்போய், கடலைநோக்கி ஓடிவந்த வெள்ளம் பாலத்தில் மோதியது. வெள்ளத்தின் உதைப்புத் தாங்க முடியாத பாலத்தின் வரப்பு பலமிழந்து உடைந்துபோனது. கடலின் நீர்மட்டத்தை விடவும், மழை வெள்ளத்தின் மட்டம் கூடிப்போனதால், முதலைக்களியிலிருந்து வெள்ளம், உடைந்த பாலத்தின் வழியாகக் கடலில் சென்று இறங்கிக் கொண்டிருந்தது. உடைந்த பாலத்திலிருந்து சோத்தி முருகைக்கற்களும், காய்ந்த தாழை விழுதுகள், குற்றிகளும் படையாய் எழுந்து வெள்ளத்தோடு சேர்ந்து கடலுக்குள் இறங்கின. இது வருடாவருடம் மாரிகாலத்தில் நிகழும் சம்பவம்தான்.

அரசாங்கத்திலிருந்து இந்தப் பாலம் கட்டவென்று சில லட்ச ரூபாய்களை ஒதுக்குவார்கள். அதிகாரிகளோ சில கூலியாட்களை மட்டும் அமர்த்தி, பாலத்தின் அருகேயுள்ள தாழம் விழுதுகள், தாழம் குற்றிகளையும், அவ்விடத்தில் சிதறிக் கிடக்கும் முருகைக் கற்களையும், ஊரிமணலையும் போட்டு நிரவி, சில ஆயிரம் ரூபாய்களுக்குள் வேலையை முடித்துவிட்டு, மீதியைத் தமது வாய்களுக்குள் போட்டு மூடிவிடுவார்கள்.

மாரி வெள்ளத்தினால் மீண்டும் பாலம் உடையும்; சில லட்சங்கள் அரசால் ஒதுக்கப்படும்; சில ஆயிரங்களுக்குள் பாலம் கட்டி முடியும்; அதிகாரிகளின் வயிறும் நிறையும். இது வழமை. அந்தக் கிராமத்தின் கிணறுகளில் நல்லதண்ணீர் இல்லாமற் போவதற்கு இந்தப் பால உடைவும் ஒரு காரணம். உடைந்த பாலத்தால் மழைநீர் ஓடியபின், கடலின் நீர்மட்டம் உயரும்போது, ஊருக்குள்ளிருக்கும் பள்ளமான பகுதிகளாகிய முதலைக்களி குளத்தைத் தேடி கடல்நீர் ஓடி நிறையும். அப்படியே உப்புக்களி, பண்டாரிகுண்டு, மண்ணெடுத்த கிடங்கு, வட்டாக்களி என்று ஊரைச் சுற்றியுள்ள பகுதிகளில் உப்புநீர் குடிகொண்டு, நிலம் முழுவதும் உவர் ஊறிக்கொள்ளும். ஊரின் கிணறுகளின் ஊற்றுக் கண்கள் அனைத்தும் உப்புநீரினையே சொரியும். கோடையில் கிணற்றுக்குள்ளேயும் உப்புப் படிந்து கிடக்கும்.

பாலனும் சாந்தனும் முரல்மீன்கள் இருபதுக்குமேல் பிடித்துவிட்டனர். அவர்கள் இருவரும் தூண்டியிலிருந்து மீட்டுப்போடும் மீன்களை ரூபன் பிடித்து சாந்தனின் சிறுபறிக்குள் போட்டான். ரூபனுக்கு இவை பெரிய புதினங்களாய் இருந்தன. தரையிற் கிடந்து துடிக்கும் மீன்களை மிகவும் சிரமத்துடன் பிடித்தான். புதிய அனுபவம், இனிய அனுபவம், முதல் அனுபவம். ஓர் சுதந்திரம் பெற்ற பூரிப்பில் அவனது உள்ளம் துள்ளியது. இரண்டுநாட் சுதந்திரம்; இது தொடர்ந்து கிடையாதா என்ற ஏக்கம் அவனுள் கோடு கீறியது. இப்படி இனிய வாழ்க்கையை அனுபவிக்க விடாமல் ஏன் அம்மா தடைவிதிக்கிறாள் என்ற கேள்வியின் மீதான விடையை அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அடிமைத்தனமாய்ப் பட்ட தனது வாழ்க்கைமீது அவனுக்கு வெறுப்பு வெறுப்பாய் வந்தது.

"நல்லதண்ணி நீரோட்டத்துக்கு முரல் நீருக்கெதிராகக் கரைக்கு வரும்" தான் ஓர் அனுபவம் உள்ள தொழிலாளி என்பதை நிரூபிக்க, தனக்குத் தெரிந்த அனுபவங்களை ரசனையுடன், சுவைபடக் கூறினான் சாந்தன்.

தரையிற் துள்ளும் மீன்களைப் பறியிற் போடுவதே பெரிய சாதனையாய் இருந்தது ரூபனுக்கு.

"துறையில சனங்கலையிறதுக்கு முதல் போனமெண்டால் நல்ல விலைக்கு வித்துப் போடலாம். போவமடா" பாலன் சொல்வது சரியென்று பட்டதால், "ஓம்" என்று சம்மதித்தான் சாந்தன். ரூபனுக்கு இங்கேயே நின்று மீன்பிடிக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது ரூபனுக்குத் தெரியும். அதனால் எதுவும் பேசாது மௌனமாகவே நின்றான் ரூபன்.

www.tamilarangam.net

"ஆரு.... ஓடியா துடிக்கத் துடிக்க நல்ல செலுவன்முரல் கேள்....." சாந்தனின் பறியிலிருந்த மீனை, மணற்தரையிற் கொட்டியபடி, துறைக் குத்தகைக்காரப் பெனாண்டோ ஏலத்திற்கு வியாபாரிகளைக் கூவி அழைத்தான்.

"அஞ்சு ரூபா"

"ஆறு"

"ஆறர"

"ஏழு"

"என்ன குடமீன் வில கேக்கிறியள்? அவ்வளவும் பாலப்பழம் மாதிரி உயிர்மீன். மேல கேளுங்க. ம்... மேல" விலைகேட்டுக் கொண்டிருந்த வியாபாரிகளை ஒரு அதட்டல் அதட்டிவிட்டு, மீனை ஒரு கிளறல் கிளறிவிட்டான் பெனாண்டோ.

"எட்டுரூவா, அள்ளட்டா?" என்று கேட்ட சைக்கில் வியாபாரி கந்தசாமியரை, "அள்ளவேணாம், இன்னும் இடமிருக்கு" அதட்டினான் பெனாண்டோ.

"ஒம்பது" சரசு.

"பத்து" மலர்.

"பத்தர" சரசு.

"பதினொண்டு" கந்தசாமி.

"பன்ரெண்டு" மலர்.

"பதிமூணு ரூவா" கந்தசாமி.

"..........."

"..........."

"மேல கேக்கலியா ஒருத்தரும்?" பெனாண்டோ.

விலைகேட்ட சரசு, மலர் ஆகியோர் கலைந்து, மற்றைய கூறியானிடம் போயினர். கந்தசாமி மட்டும் நின்றார்.

"கந்தசாமியர், நீங்க எடுங்கோ..... பிடிச்சுக்கிடிச்சுப் போடாமல் குடுங்கோ; பெடியள் பாவம்" என்றார் பெனாண்டோ.

கந்தசாமியர் கொடுத்த பதின்மூன்று ரூபாயில் ஒரு ரூபாயைக் குத்தகைக்காக எடுத்துக்கொண்டு, பன்னிரண்டு ரூபாயையும் சாந்தனிடம் கொடுத்தான் பெனாண்டோ. இத்தனையையும் பற்றை மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான் ரூபன். மீன் கூறும் இடத்துக்கு ரூபன் போகவில்லை. காரணம், அப்படிப் போயிருந்தால், திங்கட் கிழமை துறைக்கு வரும் அப்பருக்குத் தெரியவரும். துறையில் நிற்பவர்கள் "உன்ர மோன் சனக்கிழமை மீன் கொண்டுவந்தானே" என்று அப்பரிடம் சொல்ல, அப்பர் அம்மாவிடம் சொல்ல, பின் என்ன? விளக்குமாற்றுப் பூசைதான். இப்படியெல்லாம் நிகழக்கூடாதென்ற முன்னெச்சரிக்கையால்தான் சாந்தனும், பாலனும் துறைக்குச் சென்று மீன்விற்று வரும்வரை ரூபன் பற்றைமறைவில் காத்திருந்து, துறையில் நடைபெறும் சுவாரஸ்யமான வியாபார முறைகளைப் பார்த்து ரசித்தான்.

தொடரும்

www.tamilarangam.net



# வெளிநாட்டுப் பெண்ணே!

நோர்வேயில் வாழும் வெளிநாட்டுப் பெண்களில் பெரும்பகுதியினரும் சமூக உபயோகம் அற்றவர்களாகவே வாழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதுபற்றி அகதிகள் மற்றும் குடிவரவுப் பெண்கள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த நீதா கருத்துத் தெரிவிக்கையில் "இங்கு வாழும் பெண்கள் பொதுவாக நிறவாதம், பாலியல்வாதத்திலிருந்துகூடத் தள்ளி வைக்கப் படுகின்றனர். வெளிநாட்டுப் பெண்கள் நோர்வேஜியப் பெண்கள் போல சமத்துவத்தை அனுபவிப்பவர்கள் அல்லர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பெண்கள், நோர்வேநாட்டுப் பெண்கள் சமத்துவ சட்டப்படி நடத்தப் படுபவர்கள் அல்லர். உதாரணமாக இங்குவரும் பெண்கள், ஆண்களில் - கணவர்மாரில் தங்கியிருக்கவே நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். வெளிநாட்டவருக்கான நோர்வே நாட்டுச் சட்டம், பெண்களுக்குச் சமத்துவத்தை உறுதிப்படுத்தவில்லை" எனக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "மூன்றாம் உலக நாடுகளில் இருந்துவரும் பெண்கள் பலர் வேலைத்தலங்களில் சகபெண்களுடன் (நோர்வேஜிய) ஒப்பிடுகையில் அதிக கல்வித் தராதரத்தைக் கொண்டிருக்கின்றனர். சிறந்த கல்வித் தராதரத்தை அவர்கள் கொண்டிருந்தபோதும், 'மலின' வேலைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றனர். அத்துடன் சம்பள அளவும் மிகக் குறைவு."

இத்தகைய நிலை நிவர்த்தி செய்யப்பட அவர் கூறும்வழி "வெளிநாட்டுப் பெண்கள் நோர்வே மொழியைக் கசடறக் கற்பதே முதல்வழி" என்கிறார். மொழி அறிவின்மையே வெளிநாட்டுப் பெண்கள் இச்சமூகத்தில் கலக்கவும், மேல்நிலை அடையவும் தடையாக உள்ளது என்கிறார் அவர்.

இதைவிட நடைமுறையில் வெளிநாட்டு ஆண்களைப் (தமிழ் ஆண்கள் உட்பட) பற்றியும் குறிப்பிட்டே ஆகவேண்டும். இவர்களிற் பலர் தமது நாட்டில் இருப்பது போன்றே ஆண் மேலாதிக்கத்தை நிறுவ முனைகின்றனர். இவர்களிற் பலர் பெண்களை வேலைக்கு அனுப்புவதை விரும்பவில்லை. அவர்கள் தமது சொந்தக் கால்களில் நிற்கும் நிலை ஏற்பட்டால் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியாது என நினைப்பதே இதற்குக் காரணமாகும்.

MIRA

MIGRANT AND REFUGEE WOMEN'S ASSOCIATION

The MiRA Centre, P.O.Box 1749 Vika, N-0121 Oslo, Norway

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எப்பொருள் யார்வாய்க் கேட்பினும்...

துருவச்சி

## புரியாத சிதம்பர சக்கரம் எதற்கு?

நீண்ட நாட்களாக கவிராயரை வீட்டிற்கு அழைத்திருந்தேன். வீடியோ பார்க்கவென்று.

"வீடியோவா?" என்று முகம் சுளித்தார்.

"ஒன்றுமில்லை, உங்களுக்குத் தெரிந்த ஒருவரின் கலியாணவீட்டுக் கசற் ஊரிலிருந்து வந்திருக்கு. இனசனம், நண்பர்கள் என்று நிறையப்பேர் அதில் தட்டுப் பட்டினம், வாங்கோவன் பார்க்க" என அவரை அழைத்திருந்தேன்.

இன்று திடீரென வந்திருந்தார். அவருக்கு வீடியோ போட்டுவிட்டேன், கிட்டத்தட்ட மூன்று மணிநேரக் கசற்.

கலியாணத்தில் 'ஐயற்ரை சடங்குகளில்' இருந்து பரிசுகள் குடுத்து கைகுலுக்கி, வீடியோவிற்குச் சிரிப்பது வரையும் எடுத்திருந்தனர்.

தனது மூக்குக் கண்ணாடிக்குள்ளால் உற்று உற்றுப் பார்த்தார் கவிராயர். இடையிடையே என்னையும் திரும்பிப் பார்த்தார். ஐயரின் சடங்கு நீண்டு கிடந்தது. பொறுமையைச் சோதித்தது. அதுதான் இவர் என்னைத் திரும்பிப் பார்க்கிறாரோ என நினைத்து, "என்ன கவிராயர் போரடிக்குதோ?" என்றேன்.

"இல்லை இல்லை" என்றார். ஐயர் மும்முரமாக மந்திரங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

சிறிதுநேரம் விட்டு "ஓமோம்.... இதில ஐயர் என்ன சொல்லுறார் என்று விளங்குதோ?" என்று கேட்டார்.

"ம்... மந்திரம் சொல்லுறார்" என்றேன்.

"ஹ.... இல்லை, இதில சொல்லுறது ஏதாவது விளங்குதோ? ஒரு அடியாவது விளங்குதோ?" என்று கேட்டார்.

'ஙே' என விழித்துவிட்டு அசடுவழிய "இல்லையண்ணை ஒரு அறுப்பும் விளங்கேல்லை" என்றேன்.

"இப்படித்தான் தம்பி, கோயிலிலயும் பூசையிலயும் 'மந்திரம்' சொல்லுகினம், வேற சடங்கு சம்பிரதாயங்களிலயும் ஐயர் சொல்றார். ஆனால் எங்களுக்கு, எங்கட



www.tamilarangam.net

தமிழ்ச் சனத்துக்கு என்ன ஐயர் சொல்லுறார் ஏசுறாரா பேசுறாரா என்று ஒண்டும் விளங்கிறதில்லை. ஆனால் நாங்களும் விளங்காத ஒண்டைத் திரும்பவும் திரும்பவும் ஏன் எதற்கு எண்டு மறுகேள்வி இல்லாமல் கடைப்பிடிக்கிறம்.

மந்திரங்கள் எல்லாம் சமஸ்கிருத மொழியில் இருக்கு. கடவுள் சமஸ்கிருதத்தில் பூசை செய்தாத்தான் கேட்பன் என்று சட்டம் போட்டதில்லை. ஆரியர்கள் தங்கட மேலாண்மையை நிறுவவும், மற்றவை விளங்காத மந்தைகளாகத் தலையாட்டிகளாக இருக்கிறதுக்கும் இப்படி ஒரு வழிமுறையை எங்கள்மீது திணித்தவையோ?

இப்படித்தான் தம்பி கிறிஸ்தவமதம் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் தோன்றி இலங்கை போன்ற நாடுகளுக்கும் பரவியிருக்கு. முற்றிலும் அந்நிய நாட்டில் இருந்து இந்த மதம் வந்தாலும், இலங்கையிலை தேவாலயங்களிலை தமிழிலையோ சிங்களத்திலையோ பூசை நடக்குது. அதனாலை பாதிரியார் என்ன சொல்றார் எப்பிடித் துதிக்கிறார் எண்டதை மக்கள் விளங்கிக்கொண்டு கடவுளை வழிபடக்கூடியதா இருக்கு. ஆனால் அந்நியமேயற்ற, எங்களுக்கு அருகில் உருவான இந்து மதத்திலை மட்டும் இன்னும் ஏன் விளங்காத மொழியை வைச்சு, சனத்தை விளங்கா மந்தையாக்குகினம். இப்பிடித்தான் உமக்கு இன்னொரு விசயம் சொல்லவேணும். கேளும்.

பதினாலாம் பதினஞ்சாம் நூற்றாண்டு காலம்வரை ஐரோப்பாவில் கிறிஸ்தல மதம் பரவயிருந்தது. அப்போது பொதுமக்கள் யாரும் பைபிளை நேரடியா வாசிக்க முடியாது. பாதிரிமார்கள்தான் பைபிளை அவ்வப்போது வாசித்துக் காட்டினார்கள். மக்களுக்கோ பைபிளில் என்ன இருக்குது என அறிய ஆவல். மக்களின் மும்முரத்தைப் பாதிரிமார் சிலர்விரும்பவில்லை. தாங்கள் மட்டுமே பைபிளைப் படிக்க வேண்டியவர்கள் எனவும், தாங்களே கடவுளின் தொடர்பாளர்கள் என்றும் கூறி மறுக்க முனைந்தனர். ஆனால் மக்களோ நாம் வாசிக்க முடியாத பைபிள் எதற்கு என்று கிளர்ந்தெழுந்தனர். இந்த எழுச்சி 'மறுமலர்ச்சிக் காலம்' என்று அழைக்கப் படுகிறது. பிறகு முழு மக்களும் நேரடியாக பைபிளைப் படித்துக் கிறிஸ்தவத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது.

ஆனால், இந்த 21 ஆம் நூற்றாண்டுக்குள் நுழைய இருக்கும் நாங்களோ விளங்காத ஒன்றை ஏனோ வைத்திருக்கிறோம். பூசையை, அர்ச்சனையை, சடங்குகளைத் தமிழில்

> எங்களுக்கு, எங்கட தமிழ்ச் சனத்துக்கு என்ன ஐயர் சொல்லுறார் ஏசுறாரா பேசுறாரா என்று ஒண்டும் விளங்கிறதில்லை. ஆனால் நாங்களும் விளங்காத ஒண்டைத் திரும்பவும் திரும்பவும் ஏன் எதற்கு எண்டு மறுகேள்வி இல்லாமல் கடைப்பிடிக்கிறம்.

நடத்தினால் என்ன? அப்படி நடத்தினால் தமிழ்ச் சனங்கள் விளங்கி முத்தி அடைந்துவிடுவார்கள் என்று சிலருக்குப் பயமோ தம்பி? என்று கேட்டார் கவிராயர்.

அவரின் இந்தக் கேள்வி என்னை ஆழமாகச் சிந்திக்க வைத்ததால் கேள்வியிலேயே மூழ்கிப் போயிருந்த நான் "அதுதானே, இருக்கலாம். சிலர் சனங்கள் விசயங்களத் தாமாகவே விளங்கிக் கொள்ளும்போது தமது கட்டுப் பாடுகளும் தங்கட நலன்கள் (சுயநலன்களும்கூட) பாதிக்கப் பட்டிடும் எண்டு பயப்பிடுகினம், அதுதான்" என்றேன்.

www.tamilarangam.net

"ஓமோம் தம்பி.... சரியாச் சொன்னீர். இப்ப தமிழர்கள் நாங்கள், எங்களை அழிக்கிற, எங்களைக் கௌரவக் குறைச்சலா அடிமையா நடத்திற, சிங்கள அரசிட்டை இருந்து விடுதலை அடைய நினைக்கிறம். அதிலை இருந்து விடுதலையடைய, எங்கட மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாக்க எழுச்சி கொண்டிருக்கிற இந்த நேரத்திலை இந்த விசயங்களையும் மாத்தக்கூடாதே?

தமிழில் பூசைசெய்தா எல்லாம் வல்ல கடவுளுக்கு விளங்காதே? அல்லது ஏற்கமாட்டாரோ? எங்கடை தமிழ்மொழியின் சுயத்தை நேரடியாக அடக்கிற மேலாதிக்கம் செலுத்திற சிங்கள அரசுக்கு எதிராகப் போராடினால் மாத்திரம் போதுமே? மறைமுகமாக மேலாதிக்கம் செலுத்திற விசயங்களையும் நாம் கண்டுகொள்ளாம இருக்கிறம். அது ஏன்?" என்று கேட்டார்.

அதுதானே ஏன்?

இதுபற்றி ஏன் எனது சின்ன மூளைக்கு இந்த விஷயம் தட்டுப்படவில்லை? ஏன் நான் யோசிக்காமல் இவ்வளவு காலமும் நானும் கோவில் குளம் எண்டு ஏறிஇறங்கி கும்பிட்டு வாறன்? சின்ன வயசிலை இருந்து விளங்காமலே இரு என்று எனக்கு ஊட்டப்பட்டுப் போயிருப்பதை இப்போ உணர்ந்தேன்.

இனி இதற்கு என்ன செய்யலாம்? ●

---

## நண்பனுக்கு!

20.03.93

### முல்லை அமுதன்

வழமையாக
தூரிகை காணாமல் போயிருக்கும்.
இன்று,
விரல்களே இல்லாமல் இருந்தேன்.

வானத்திலும்
இராணுவ ஆக்கிரமிப்பா?
நட்சத்திரங்களைக் காணோமே.

விதி எழுதிய
மனிதனின் எழுத்தை,
துப்பாக்கி
எழுதிச் செல்கிறது,
அவ்வளவுதான்!


மாலைப்பொழுது இன்று,
சோகத்துடன்
வீற்றிருந்தது என்
காதலி தொலைந்தது தேட்டு!

செடிகளும் பூப்பதை
நிறுத்தி
நாட்களாயிற்று
எத்தனை நாட்களுக்கு
கந்தக சுமைகளை
எங்கள்
மண்ணும் சுமந்துகொண்டிருக்கும்!

ஒன்றில், நண்பனே
எழுந்துவா.
குருதிகுடித்த மண்களை
நேசிக்கப் பழகு!
காதலியின்
இழந்த காதலை
அர்த்தப்படுத்து.
வெள்ளைப் பூக்களுக்கும்
வாழ்வு
கொடுக்க உறுதி கொடு!

இல்லையெனில்
ஒருமுழம் கயிறு,
ஓடும் அருவி,
அலைகடல்
இருக்கவே இருக்கிறது
இறந்துவிடு!

www.tamilarangam.net



Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 45, April'93

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்